விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 27 திங்கட்கிழமை (10.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

## தமிழர்களின் அரசியல் நெருக்கடிக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும்



### மோடியிடம் கூட்டமைப்பு வலியுறுத்தல்

(கொழும்பு)
தமிழர் தரப்பின் நீண்டகால நியாயமான கோரிக்கைகளை கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகளை பெற்றுத்தர பாரத பிரதமர் உறுதுணையாக நிற்க வேண்டும் என 23

## இந்தியப் பிரதமர் மோடி மகிந்தவை சந்தித்து பேச்சு



(கொழும்பு)
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
ஜனாதிபதி செயலகத் 23

# தீவிரவாதத்தை கூட்டாக எதிர்கொள்ளத் தயார்!



## இலங்கையில் வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மைத்திரியிடம் தெரிவிப்பு

(கொழும்பு)
பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதையின் அடிப்படையில் தீவிரவாதத்தை கூட்டாக எதிர்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கை வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்தில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய சந்திப்புக்குப் பின்னர், வெளியிடப்பட்டுள்ள அந்தப் பதிவில்,

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தேன். பத்து நாட்களில் எமது இரண்டாவது சந்திப்பு இது.

தீவிரவாதம் ஒரு கூட்டு அச்சுறுத்தல். அதனை கூட்டாக, மையப்படுத்திய நடவடிக்கையின் மூலம் எதிர்கொள்ள வேண்டும் என இலங்கை ஜனாதிபதியும் நானும் இணங்கியுள்ளோம்,

பகிர்வான, பாதுகாப்பான எதிர்காலத்துக்காக இலங்கையுடன், பங்காளராக இணைந்து நிற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துகிறேன்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (3)

## பொருளாதார அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு

### ரணிலிடம் மோடி உறுதி



(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பின் போது பொருளாதார அபி 23

## இந்தியாவுக்கு வாருங்கள் தீர்வு பற்றி பேசுவோம்

### கூட்டமைப்புக்கு மோடி அழைப்பு

(கொழும்பு)
இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நேற்று சந்திப்பு நடந்தது.
சந்திப்பின் தொடக்கத்தில், மோடி இரண்டாவது முறையாகவும் பிரதமராக பதவி 23

## இலங்கைப் பயணத்தை முடித்து மீண்டும் இந்தியா பயணமானார் மோடி

(கொழும்பு)
நேற்றுக் காலை இலங்கைக்கு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்றுப் பிற்பகல் மீண்டும் இந்தியா நோக்கி பயணமாகியுள்ளார். 23

## காற்றுடன் கூடிய காலநிலை தொடரும்

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)
நாடு முழுவதும் தற்போது காணப்படும் காற்றுடன் கூடிய காலநிலை அடுத்த சில நாட்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
"யாழ்ப்பாண மாவட்டத்திலும் பொதுவில் 23

## சட்டவிரோதமாக வெட்டிய 97 கிலோ மாட்டிறைச்சியுடன் குருநகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
அனுமதி பெறப்படாமல் மாட்டிறைச்சி வெட்டியமை மற்றும் அதனை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை பிணையில் விடுத்த யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் காயத்திரி சைலவன், சந்தேக நபரிடம் மீட்கப்பட்ட 97 கிலோ கிராம் இறைச்சியை தீயிட்டு அழிக்குமாறு உத்தரவிட்டார்.
யாழ்ப்பாணம் குரு 23

## அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)
வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரண உரித்துப்படிவங்கள் வழங்கும் நிகழ்விற்கு வருகை தந்த ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக 23

## வவுனியாவில் நீரில் மூழ்கி இரு மாணவர்கள் பலி

### கிடங்கில் நின்ற நீரில் குளித்தபோது துயரம்

(வவுனியா)
வவுனியா பம்பைமடு கல்குவாறியாக பயன்படுத்தப்பட்ட இடத்தில் தேங்கியிருந்த நீரில் குளிப்பதற்காக சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.
நேற்று மதியமளவில் பம்பைமடு இராணுவ முகாமுக்கு பின்புறமாக உள்ள பகுதியில் கடந்த காலத்தில் கல் 23

## ஒலுமடு விபத்தில் இளைஞன் பலி

### மோ.சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் பரிதாபம்


(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுமடு பகுதியில் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளை 23

## இணுவில் காணி உரிமத்தில் சட்டப் பிரச்சினை சிறுவர் வைத்தியசாலை கைநழுவிப் போகும் அபாயம்

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்துக்கென இணுவிலில் அமைக்கப்படவிருந்த சிறுவர் வைத்தியசாலையை அமைக்க முடியாத சிக்கல் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தென்னிந்தியத் திருச்சபைக்குச் சொந்தமான இணுவில் மக்லியொட் வைத்தியசாலைக் காணியின் ஒரு பகுதி சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கெனத் தென்னிந்திய 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இதய அஞ்சலிகள்



## அமரர் சுப்பிரமணியம் செல்லத்துரை

(தடுவாங்கலட்டி, அளவெட்டி வடக்கு)

J/215 அளவெட்டி வடக்கின் கிராமச் செயலகம், அளவெட்டி பிரதம அஞ்சல் அலுவலகம் என்பவற்றிற்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்குப் போதுமான காணிகளை முழுமனதுடன் பொருத்தமான இடத்தில் இலவசமாக வழங்கியதுடன் இச்சமூகத்திற்கும் தன்னாலான உதவிகளை வழங்கும் பெருமகன் தடுவாங்கலட்டி, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த **திரு.செல்லத்துரை சிவபாலன்** அவர்களின் பாசமிகு தந்தையார் அமரர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள் 07.06.2019 அன்று இந்தியாவில் இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்களின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
அளவெட்டி மக்கள் கூட்டத்தில்,
க.கணேசதாஸ் J.P.
ஓய்வு நிலைக் கிராம அலுவலர்
அளவெட்டி வடக்கு

(C-6607)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



## திரு.மகேசன் கஜேந்திரன்

(B.A, Sc.Maths Trd, SLPS-1)

அதிபர் - யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

இன்று மணிவிழாக் காணும்
திரு.மகேசன் கஜேந்திரன்
அவர்களின் கல்விச்
சேவையைப் பாராட்டி
அவர்களின் ஓய்வுகாலம்
சீரும் சிறப்புடனும் அமைய
எல்லாம் வல்ல இறையருளை
வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
கோட்டக் கல்விப் பணிப்பாளரும்,
அதிபர்களும்,
நல்லூர் கல்விக்கோட்டம்.

(C-6639)

### அரசாங்கத்திற்கு எதிராக

# ஜே.வி.பி கொழும்பில் புதனன்று ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்திற்கு எதிராக நாளை மறு தினம் புதன் கிழமை கொழும்பில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

ஏப்ரல் 21 ஆம் திகதி அடிப்படை வாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது என்பதை இன்று நாட்டு மக்கள் அனைவரும் புரிந்துக் கொண்டார்கள்.

பாராளுமன்ற தெரிவு குழுவில் பல விடயங்கள் பகிரங்கப்படுத் துவது ஏற்றுக் கொள்ள கூடியதே.மக்களை பாதுகாக்க தவறியுள்ள அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருப்பது ஜனநாயகத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்டது.

இந்த அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு எவ்வித தகுதிகளும் கிடையாது. உரிய காலத்தில் இடம் பெற வேண்டிய தேர்தலும் அரசியல் தேவைக்காக பல்வேறு காரணிகளை முன்னிலைப்படுத்தி பிற் போடப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டியே இந்த போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி மேற்கொள்ளவுள்ளதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். (03)

# மன்னார் மாவட்டத்தில் 10 ஆயிரம் பேருக்கு சமுர்த்தி உரித்துப்படிவம் வழங்கி வைப்பு

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 10 ஆயிரத்து 113 சமுர்த்தி பயனாளிகளுக்கான சமுர்த்தி நிவாரண உரித்துப்படிவம் வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை(9) மாலை 2.45 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகே, விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான றிஸாட் பதியுதீன் ,சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர் (03.285)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


### பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழை

# இணையத்தளம் ஊடாக பெற நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுதராதர உயர் தரம், சாதாரண தரம் உள்ளிட்ட அனைத்துப் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்களை இணையதளம் ஊடாகப் பெற்றுக் கொள்ளவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் அறிவித்துள்ளார்.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் கல்விப் பொதுதராதர உயர் தரம், சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களை பிரதான தபாலகங்களில் பெற்றுக்கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பரீட்சைகள் திணைக்களமும் தபால் திணைக்களமும் செய்து கொண்ட உடன்படிக்கை தொடர்பான வெளியீடு நாளை செவ்வாய்கிழமை கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

அதற்கு மேலதிகமாக இணையத்திலும் பெறுபேற்றுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி செய்யப்படவுள்ளது.

இதற்கான கண்டனத்தை பரீட்சார்த்திகள் தமது கடனட்டை அல்லது டெபிட் அட்டைகளைப் பயன்படுத்திச் செலுத்த முடியும்.

அல்லது அருகிலுள்ள தபால் நிலையத்தில் அதற்கான கட்டணத்தை செலுத்தி, பற்றுச்சீட்டு இலக்கத்துடன், இணையத்தளத்தின் ஊடாக பரீட்சை பெறுபேற்று சான்றிதழுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதனையடுத்து, குறித்த சான்றிதழை விரைவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டிலுள்ள இலங்கைக் குடிமகன் பரீட்சை பெறுபேற்று சான்றிதழை ஒன்லைன் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பரீட்சாத்தி கொழும்பிலுள்ள பரீட்சைத் திணைக்களத்துக்கு வருகை தந்து சிரமப்படவேண்டிய தேவையேற்படாது" என்று பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (03)

# மன்னாரில் மின்குமிழ் பொருத்தப்பட்ட கம்பம் சரிந்ததில் மூவர் காயம்

மன்னாரில் சமுர்த்தி நிவாரண உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (9) இடம் பெற்ற போது தற்காலிக மின் குமிழ் பொருத்தப்பட்ட கம்பம் சரிந்து வீழ்ந்ததில் மூன்று பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான சமுர்த்தி நிவாரண உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது மின் குமிழ் பொருத்தப்பட்ட கம்பம் காற்றின் காரணமாக சரிந்து மக்கள் மீது வீழ்ந்ததில் வயோதிப ஆண் ஒருவரும், வயோதிப பெண்கள் இருவரும் காயமடைந்த நிலையில் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (03, 285)

# பயங்கரவாதத்தின் கொடூரமான செயல்களால் இலங்கையை ஒன்றும் செய்யமுடியாது



## இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதத்தின் கொடூரமான செயல்களால் இலங்கையை ஒன்றும் செய்து விடமுடியாது எனத் தெரிவித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அந்தத் தாக்கத்தில் இருந்து இலங்கை விரைவில் மீண்டெழும் எனத் தான் நம்புவதாக நம்பிக்கை வெளியிட்டார்.**

59 பேர் அடங்கிய தூதுக்குழுவினருடன், நேற்று முற்பகல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விசேட விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அதன்பின்னர் தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தை சென்று பார்வையிட்ட பிரதமர் இதனையடுத்து டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் பதிவிட்டுள்ளதாவது, "இலங்கை விரைவில் மீண்டெழும் என நான் நம்புகின்றேன்.

பயங்கரவாதத்தின் கொடூரமான செயல்களால் இலங்கையை ஒன்றும் செய்து விட முடியாது. இலங்கையிலுள்ள மக்களுடன் இந்தியா எப்போதும் துணை நிற்கும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# மோடியை குடை பிடித்து அழைத்து சென்ற மைத்திரி

## கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு














(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட குழுவினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சில அமைச்சர்கள் வரவேற்பளித்தனர்.

அங்கிருந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கிப் புறப்பட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செல்லும் வழியில் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தை பார்வையிட்டதுடன் வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

அத்துடன் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை மற்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் சந்தித்து தனது கவலையையும் இரங்கலையும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி செயலக வளாகத்திற்குள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரவேசித்த வேளை மழை பெய்தமையால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை கறுப்புக் குடை பிடித்து வரவேற்பளித்து பாதுகாப்பாக செயலகத்திற்குள் அழைத்துச் சென்றார்.

இதன் பின்னர் அவருக்கு இராணுவ மரியாதையுடன் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. அதன் பின்னர் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோர் வரவேற்பளித்தனர்.

அத்துடன் பிரதமர் நரேந்திர மோடி தமது வருகையை நினைவுகூரும் வகையில் ஜனாதிபதி செயலக வளாகத்தினுள் மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார்.

இந்திய பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசு கடந்த 30 ஆம் திகதி பதவி ஏற்றது.

2 ஆவது முறையாக பிரதமர் பதவியை ஏற்ற மோடி தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மாலைதீவுக்கு மேற்கொண்டார். இதையடுத்து தொடர்ந்து இலங்கைக்கு நேற்று அவர் விஜயம் மேற்கொண்டார்.

தனது மாலைதீவு பயணத்திற்கு முன் பிரதமர் மோடி வெளியிட்ட செய்தியில், மாலைதீவு மற்றும் இலங்கைக்கு மேற்கொள்ளும் பயணம், அந்த நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவை மேம்படுத்திக்கொள்ள உதவும் என நம்புவதாக குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி, மோடி நேற்று முன்தினம் மாலைதீவு சென்றார். அங்கு அவருக்கு மாலைதீவு அரசின் உயரிய விருதை அந்த நாட்டின் ஜனாதிபதி வழங்கினார்.

இதனையடுத்து, அங்கிருந்து புறப்பட்ட பிரதமர் நரேந்திர மோடி நேற்று இலங்கை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர் செல்வபூரணம் பசுபதி



கொடுக்குளாய், ஆழியவளையைப் பிறப்பிடமாகவும், இல.65, ஐயனார் வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வபூரணம் பசுபதி 08.06.2019 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பசுபதி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிள்ளையினார் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் பவானந்தன் (கணக்காளர் - லண்டன்), தயானந்தன் (இலங்கை நிர்வாக சேவை பயிலுநர்), சிவானந்தன், (விரிவுரையாளர், கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), நளினி (ஆசிரியை, யா/ சென். தோமஸ் றோ.க.த.க பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் இராசரத்தினம், காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தி, தயாளினி, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும், மகிஷா, லகிஷா, ஆருஷன், அபிஷா மற்றும் கிருஷிகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாலை 3.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.65,
1 ஆம் ஒழுங்கை,
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
021 226 0358
077 978 9387
077 377 4206

(C-6642)

# மரண அறிவித்தல்

## அமரர் இலட்சிமிநாதன் கமலாதேவி



பிறப்பு 28.02.1949 இறப்பு 09.06.2019

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சிமிநாதன் - கமலாதேவி அவர்கள் நேற்று 09.06.2019 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசிதம்பரம் - நாகம்மா மண இணையரின் அன்பு மகளும், முத்துகுமாரு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், இலட்சிமிநாதனின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், பவானி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), கோமதி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணபவன், சோதிலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கெங்காதேவி, சிவசுந்தரம் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும் தில்லைச்சிவலோகநாதன், யசோதராதேவி (கனடா), இலங்கைநாதன், இராமநாதன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பவதி ஆகியோரின் மைத்துனியும், லேஜிகன், வர்ஷிகன், அஸ்விகா, விர்த்திகா, ருஷ்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.06.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக் கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் தெற்கு விளங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

(C-9087)

# நுவான் பிரதீப்பிற்கு காயம்

பிரிஸ்டல் மைதானத்தில் பயிற்சியின் போது இலங்கை நட்சத்திர பந்து வீச்சளார் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

வலை பயிற்சியின் போது குசால் பெரேராவுக்கு, நுவன் பிரதீப் பந்து வீசியுள்ளார். பெரேரா பந்தை பிரதீப்பை நோக்கி அடிக்க, பந்தை தடுக்க முயன்ற போது, பந்து தாக்கி அவரின் சுண்டு விரலில் காயம் ஏற்பட்டுள்ளது.

உடனே மருத்துவ ஊழியர்கள் சிகிச்சைக்காக பிரதீப்பை அழைத்துச் சென்றுள்ளனர். அவர் வங்கதேச அணிக்கு எதிரான போட்டியில் விளையாடுவாரா என்ற தகவல் விரைவில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


# சர்ச்சையில் சிக்கிய ஜாம்பா

இந்திய அணிக்கெதிரான போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் ஜாம்பா சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண தொடரில் நேற்றைய போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் விளையாடின.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்நிலையில், இப்போட்டியில் அவுஸ்திரேலியா அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஜாம்பா, பந்து வீசுவதற்கு முன்பு தன்னுடைய பேண்ட் பையில் இருந்து ஏதோ எடுத்து தடவுவது போன்று உள்ளது. அந்த வீடியோ தற்போது சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# பும்ராவிற்கு நடிகை அனுபாமாவுடன் காதலா?




இந்திய கிரிக்கெட் அணியின் தலை சிறந்த வேகப்பந்து வீச்சாளராக இருக்கும் பும்ரா, பிரபல நடிகையை காதலிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் தலை சிறந்த வேகப்பந்து வீச்சாளர் பும்ரா. இவர் ஐ.சி.சி. பவுலர்கள் தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார்.

இவருக்கும், மலையாள நடிகை அனுபமாவுக்கும் காதல் மலர்ந்துள்ளதாக கிசுகிசுக்கப்படுகிறது. நடிகை அனுபமா, மலையாளத் தில் மிகப் பெரிய வெற்றி பெற்ற பிரேமம் படத்தின் மூலம் அறிமுகமானவர். சுருட்டை முடி, கவர்ச்சியான சிரிப்பின் மூலமாக ரசிகர்களை மிகவும் கவர்ந்திருந்தார்.

இவர்களது காதல் கிசுகிசுக்க அவர்களின் டுவிட்டர் பக்கம் தான் காரணமாக அமைந்துள்ளது. பும்ரா டுவிட்டரில் 25 பேரை 'பாலோ' செய்கிறார். இதில் அதிகம் பேர் கிரிக்கெட் வீரர்கள். மற்றவை கிரிக்கெட் தொடர்புடைய பக்கம். அவர் பாலோ செய்யும் ஒரே ஒரு நடிகை அனுபமா தான்.

அதேபோல அனுபமாவும் தனது டுவிட்டரில் பும்ராவை 'பாலோ' செய்கிறார். பும்ரா போடும் ஒவ்வொரு பதிவுக்கும் லைக் செய்து அதை 'ஷேர்' செய்து வருகிறார். இதனால் இவர்கள் இருவரும் காதலித்து வருவதாக இணையத்தளத்தில் நெட்டிசன்கள் தகவல் பரப்பி வருகின்றனர்.

# இந்தியாவின் பசிக்கு இரையானது அவுஸ்திரேலியா




இந்தியா - ஆஸ்திரேலியா மோதும் உலகக்கிண்ணத்தின் 14-வது லீக் ஆட்டம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் விராட் கோலி பேட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி களம் இறங்கிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டை இழந்து 352 ரன் எடுத்தது. முன்னணி வீரர்களான ரோகித் சர்மா (57) தவான் (117) விராட் கோலி (82) ஹர்திக் பாண்டியா 48 ரன் எடுத்தனர்.

இதையடுத்து ஆஸ்திரேலிய அணி பேட்டிங்கை தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக டேவிட் வார்னரும், ஆரோன் பிஞ்ச்சும் ஆடினர். இருவரும் 10 ஓவர் வரை 48 ரன் சேர்த்தனர். பிஞ்ச் 36 ரன் இருக்கும்போது எதிர்பாராதவிதமாக ரன் அவுட் ஆகி வெளியேறினார்.

அடுத்து வந்த சுமித், வானருடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் நேர்த்தியாக விளையாடி ரன் சேர்த்தனர். வார்னர் அரை சதம் அடித்த சிறிது நேரத்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். அவர் 56 எடுத்தார்.

பின்னர் வந்த வீரர்களான உஸ்மான் கவாஜா 42 ரன்னிலும், மேக்ஸ்வெல் 28 ரன்னிலும் அவுட் ஆகினர். அதைத்தொடர்ந்து வந்த அலெக்ஸ் கேரி அதிரடியாக ஆட இறுதியில் ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 316 ரன் மட்டுமே எடுத்தது. இதனால் இந்திய அணி 36 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 23 சீனியர் லேன் 14/8 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நாகமுத்து வேலுப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து வேலுப்பிள்ளையும் பெண் முத்தியும் பிரசித்த நொத்தாரிசு சு.பதஞ்சன முகதாவில் 1951.06.01 ஆம் திகதியிடப்பட்ட 2342 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் வேலு சின்னத்துரை பெண் பூமணிக்கு வழங்கியுள்ளார். வேலு சின்னத்துரையும் பெண் பூமணியும் பிரசித்த நொத்தாரிசு இ.சிவசுப்பிரமணியம் முகதாவில் 1961.06.05 திகதியிடப்பட்ட 3709 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தம்பிமுத்து கனகரத்தினத்திற்கு அறுதியாக ஒப்படைத்துள்ளார். தம்பிமுத்து கனகரத்தினம் பிரசித்த நொத்தாரிசு ச.கனகசபாபதி முகதாவில் 1974.07.03 ஆம் திகதியிடப்பட்ட 7488 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கனகரத்தினம் மகள் றஞ்சினி தேவிக்கு வழங்கியுள்ளார். (தம்பி முத்து கனகரத்தினத்தின் சீவிய உரித்துக்கு அமைவாக வழங்கியுள்ளார்)

பின்னர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு இலக்கம் 6/6 சீனியர் லேன் ஆறுமுகம் பாலசிங்கம் பெண் நாகேஸ்வரியும் முதலாம் புறமாகவும் ஆறுமுகம் இரத்தினசிங்கமும் பெண் ரஞ்சினிதேவியும் இரண்டாம் புறமாகவும் பிரசித்த நொத்தாரிசு இராசரத்தினம் முகதாவில் 1978.09.04 ஆம் திகதியிடப்பட்ட 372 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி நிறைவேற்றப்பட்டது. குறித்த ஆதனத்தை ஆறுமுகம் பாலசிங்கமும் பெண் நாகேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு சே.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 1990.05.27 ஆம் திகதியிடப்பட்ட 682 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் வேலணை கிழக்கு சரவணை சிவசம்புவும் பெண் புஸ்பகலாதேவிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர். சிவசம்புவும் பெண் புஸ்பகலாதேவியும் பிரசித்த நொத்தாரிசு திருமதி S.இளங்கோவன் முகதாவில் 1991.01.05 ஆம் திகதியிடப்பட்ட 3195 இலக்க அறுதி உறுதி மூலம் இராமசாமி பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவிக்கும் வழங்கியுள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தில் இருக்கும் இராமசாமி பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவி பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் முகதாவில் 2011.02.18 ஆம் திகதியிடப்பட்ட 1045 இலக்க நன்கொடை உறுதி மூலம் தங்களில் ஒருவர் இறக்கும் பட்சத்தில் இருப்பவரின் சீவிய உரித்துக்கு அமைவாகவும் தாங்கள் இருவரும் விரும்பியவாறு எந்த நேரத்திலும் காரணம் எதுவுமின்றி நன்கொடை உறுதியை அழிப்பதற்கும் தமக்குரிய பங்கை தமது விரும்பியபடி உரிமையாக்கி ஆட்சி செய்வதற்கும் உள்ளிட்ட வேறு பல நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தமது அற்ரேனித்தத்துவக்காரர் தர்மலிங்கம் இராசையா மூலம் தங்கள் புதல்வன் இராமலிங்கம் கரனுக்கு வழங்கியுள்ளனர்.

எனினும் இராமசாமி பாலசிங்கம் மற்றும் சகுந்தலாதேவி பாலசிங்கம் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சண்முகம் இராமலிங்கம் முகதாவில் நிறைவேறிய 2017.03.25ஆம் திகதியிடப்பட்ட 1120 இலக்க அழித்தல் உறுதி மூலம் மேற்குறித்த 1045 ஆம் இலக்க நன்கொடை உறுதியை இரத்து செய்து வலுவற்றதாக்கிக் கொண்டனர். பின்னர் அதே நொத்தாரிசு சண்முகலிங்கம் இராமலிங்கம் முகதாவில் 25.03.2017 ஆம் திகதி 1121 ஆம் இலக்கத்தில் ஓர் பிரகடனப்படுத்தல் உறுதியையும் நிறைவேற்றியுள்ளனர்.

### 1ஆம் ஆதன அட்டவணை

01. வடமாகாண யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை, தற்காலம் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட J/100 வண்ணார் பண்ணை வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவு குசவன் புலமும் நெல்வேலி வளவும் குளி 17.1 வீடும் கிணறும் பயிர்வகைகளும் இது 1978 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி நில அளவையாளர் சீ.இரத்தினசிங்கம் அவர்களால் 735ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 எனச் சூட்டப்பட்டுள்ளது. இந்தக்குளி 17.1 இற்கு எல்லைகள் கிழக்கு A.S.சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தின் ஆதனம் மேற்கு நன்கொடை கொடுநர்களுக்குரிய குறித்த படத்தில் 1ஆம் துண்டு தெற்கு ஒழுங்கை இதடங்கலும் ஆனால் இதற்குள்ளருக்கும் கிணற்றின் 1 ஆம் துண்டாகிய மேற்கெல்லை ஆதனத்திற்குரிய (கீழ் காணும் இரண்டாம் ஆதனத்திற்குரிய) பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் புற நீக்கல்.
02. மேற்படி வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "குசவன் புலமும் நெல்வேலி வளவும்" குளி 17.1 ஒரு பகுதி வீடும் பயிர் வகைகளும் இரு 1978 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி நில அளவையாளர் சீ.இரத்தினசிங்கம் அவர்களால் 735 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்தக்குளி 17.1 கு எல்லைகள் கிழக்கு மேற்குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட 1ஆம் ஆதனமும் வீட்டின் பகுதியும் வடக்கு வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தின் ஆதனம் மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலும் ஆனால் துண்டு 2 எனச் சுட்டப்பட்டுள்ளது. முதலாம் ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்.

குறித்த துண்டுகள் 2 மற்றும் 1 சமீபத்தில் மீளளவை செய்யப்பட்டுள்ளதோடு அதன் விபரமும் புதிய விஸ்தீரணமும் கீழே 2 ஆம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

### 2ஆம் ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை, தற்காலம் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குபட்ட J/100 வண்ணார்பண்ணை வட கிழக்கு கிராம அலுவலர் பிரிவு "குசவன் புலமும் நெல்வேலி வளவும்" இது 1978 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி நில அளவையாளர் சீ.இரத்தினசிங்கம் அவர்களால் 735 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 (17.1 குளி) எனவும் துண்டு 1 (17.1குளி) எனவும் சுட்டப்பட்டிருந்தது. சமீபத்தில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.கந்தசாமி அவர்களால் மீளளவை செய்யப்பட்டு 2017.02.27 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட 3575 ஆம் இலக்கம் கொண்ட புதிய நில அளவைப்படத்தில் அவ்விரு துண்டுகளும் ஒரே துண்டாக 1 எனச் சுட்டப்பட்டுள்ள அதே வேளை அதன் மொத்த விஸ்தீரணம் பரப்பு நில இலாச்சம் இரண்டு குளி ஐந்து தசம் இரண்டு மூன்று (நில இலா.2குளி 5.23) அல்லது 0.0589 ஹெக்டயர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நில இலாச்சம் 2 குளி 5.23 கொண்ட துண்டு 1 மற்றும் வீடும் கிணறும் ஆகியவற்றுக்கு குறித்த 3575 ஆம் இலக்கப்படத்தின் பிரகாரம் எல்லைகள்.

**கிழக்கு:-தாமோதரம்பிள்ளை அருளானந்தத்தின் ஆதனம்.**
**வடக்கு:-ஐயம்பிள்ளை பூபாலசிங்கம் ஆதனம்.**
**மேற்கும் தெற்கும்:- ஒழுங்கை இதடங்கலும்.**

தற்போது பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மானுவல் ஆனல்ட் முதல்வர், மாநகர சபை. (C-6632)

# தெரிவுக்குழுவின் விசாரணைகள் இடைநிறுத்தப்படாது

## ஆசு மாரசிங்க உறுதி



(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மைகளை அறிந்து கொள்வதற்கு, மக்களுக்கு இருக்கும் உரிமையை இல்லாமல் செய்ய இடமளிக்கப்படாதென, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் இந்த விசேட தெரிவுக்குழுவின் விசாரணைகள் இரத்துச் செய்யப்படமாட்டாதென; அவர் மேலும் தெரிவித்தார்.

தெரிவுக் குழுவின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற வேண்டுமென்ற எண்ணத்திலேயே தாம் இருப்பதாகவும், கட்டாயமாகத் தெரிவுக்குழுவின் அறிக்கை வரும் வரை நாம் இதனை நடைமுறைப்படுத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அஜித் கொலை ஒருவர் கைது!

(மஹறவத்த)

ஜாஎல - ஏகல - மஹறவத்த பிரதேசத்தில் பாதாள உலகக்குழு உறுப்பினர் கிரிஷாந்த அஜித் குமார எனப்படும், கலு அஜித்தை சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு ஏகல - மடம வீதியில், பொலிஸ் அதிரடிப் படையினால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 5 ஆம் திகதி ஜாஎல - ஏகல - மஹறவத்த பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமான நடந்து கொள்வர், கௌரவமான நாள்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், நண்டர்கள் சந்திப்புண்டு.

**கடகம்:** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, சுக் | செவ்.புத ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை | | சந் |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

10.06.2019
வைகாசி 27, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
அட்டமி பின்னிரவு 12.04 மணிவரை
பூரம் பிற்பகல் 4.15 மணிவரை
சுபநேரம் 11.52 - 1.22 மணிவரை
இராகுகாலம் 7.22 - 8.52 மணிவரை

வளவன்

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், தொழில் ரீதியான முக்கிய நபர்களை சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

# நான் இனவாதத்தை தூண்டவில்லை ஆதங்கத்தையே வெளிப்படுத்தினேன்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா விளக்கம்

(சாவகச்சேரி)

கடந்த வருடம் ஜூலை மாதம் இரண்டாம் திகதி எனக்கெதிராகத் தூண்டப்பட்ட இனவாதம் தான் இன்று முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களுக்கு எதிராகத் தூண்டப்பட்டு அவர்களை இராஜினாமா செய்ய வைத்துள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துச் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை காரணம் காட்டி முஸ்லிம் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிரான விதத்தில் அவர்களை வலுவிழக்கச் செய்வதற்காக எதிர்க் கட்சியில் இருந்தவாறு இனவாதத்தைத் தூண்டி அவர்களை இராஜினாமா செய்ய வைத்தனர்.

அவர்கள் ஒருபோதும் இனவாதத்திற்குப் பயந்து இராஜினாமா செய்யவில்லை. தங்களை விசாரித்து சரியான முடிவைச் சொல்லுமாறு தான் இராஜினாமா செய்தனர்.

கடந்த வருடம் ஜூலை இரண்டாம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நான் பேசிய கருத்து



பிழையான வடிவில் திரிக்கப்பட்டு தெற்கில் இனவாதிகள் இனவாதத்தைத் தூண்டினார்கள். நாங்கள் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்துவதற்குத் தயாராக உள்ளோம் என்றே அவர்கள் அதனை தவறாகத் திரிவுபடுத்தி எங்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டினார்கள்.

அன்று நான் யாருடைய தூண்டுதலும் இன்றி சொந்தப் புத்தியில் உடனடியாக இராஜினாமா கடிதம் வழங்கியிருந்தேன். அரசாங்கத்திற்கு இடையூறாக இருக்கக்கூடாது என்றே நான் அன்று அந்த முடிவை எடுத்தேன்.

நான் தவறாகச் செயற்பட்டிருந்தால் என்னை விசாரித்து தண்டனை வழங்குங்கள். அல்லாவிட்டால் பதவியை வழங்குங்கள் என்றே கூறியிருந்தேன்.


மூன்று குழந்தைகளின் தாய் என்ற ரீதியிலும், நல்லாட்சி அரசாங்கத்தில் வட்டுக்கோட்டை யில் ஆறு வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட அந்த அனர்த்தம் தொடர்பாகவே நான் அன்று எனது ஆதங்கத்தைத் தெரிவித்திருந்தேன்.

உண்மையில் அந்த இடத்தில் அதைக் கூறத் தான் வேண்டும். 2009 மே 18 ஆம் திகதிக்கு முன்னர் எந்த வீட்டிலும் முரண்பாடு இருந்திருக்காது. எந்தவொரு இடத்திலும் சிறுவர் மற்றும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்திருக்காது. அந்த வேளையில் நாம் யாருக்கு கீழ் வாழ்ந்து கொண்டிருந்தோமோ அவர்கள் சரியான முறையில் சட்டத்தை கையில் வைத்திருந்தார்கள்.

சரியாக தண்டனை வழங்கி இருந்தனர். நள்ளிரவு 12 மணிக்கும் பெண்கள் தனியாக வீதியில் நடந்து சென்ற வரலாறு தான் 2009 மே 18 இற்கு முன்னர் இருந்தது.

அந்தச் சரியான நிர்வாகத்தைக் கொண்டு வரும்படி தான் நான் அந்த இடத்தில் கூறி இருந்தேனே தவிர எந்த இனவாதத்தையும் நான் தூண்டவில்லை. இன்று அதை மீண்டும் வலியுறுத்துகின்றேன் அந்த நிர்வாகம் இங்கு வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அதிபர் கஜேந்திரனுக்கு கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

அகவை 60 இல் ஓய்வு பெறும் யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் ம.கஜேந்திரன் (கஜன்) அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 5.30 தொடக்கம் இரவு 8 மணிவரை யாழ்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறும்.

ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் ம.கஜேந்திரன் வு/பாலமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். யா/திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் 2006-2008 வரை அதிபராகக் கடமையாற்றியதோடு யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய நிலையில் ஓய்வுபெற்றுச் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)




# அங்கத்தவர்களுக்கு சேவை விருது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமாதான நீதவான்கள் சங்கத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களின் சேவையைப் பாராட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி விருது வழங்கப்படவுள்ளது என சங்கத் தலைவர் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன் அறிவித்தார்.

எனவே வட மாகாணத்தில் உள்ள சமாதான நீதவான்கள் அனைவரும் பதிவை இம்மாதம் 16 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு பீ. ஜெயவிந்தன் (தலைவர்) 077 641 0869, நி.திசையானந்தன் (செயலாளர்) 077 080 5621, க.நிரைஞ்சன் (பொருளாளர்) 077 069 0990. (இ)

# கம்பரெலியத் திட்டத்தில் எமக்கு எந்த அபிவிருத்தியும் கிடைக்கவில்லை

## யோகபுர மக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/265 யோகபுரக் கிராமம் பல வருடங்களாக எவ்வித அபிவிருத்தியும் இன்றிக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

இலங்கை அரசாங்கத்தால் கிராமங்களை எழுச்சியடையச் செய்யும் நோக்கில் வழங்கப்படுகின்ற "கம்பரெலிய" திட்டம் அரசியல்வாதிகளையம் அவர் கள் சார்ந்தவர்களையும் திருப்திப் படுத்தும் திட்டமாகக் காணப்படுகிறது.

தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் அரசியல்வாதிகள் தேர்தல் முடிவுற்றதும் குறித்த பகுதிகளுக்கு வருவதில்லை எனவும் அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்.

குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர் கம்பரெலிய திட்டத்தில் தமது கிராமத்தவர்கள் திருப்திப்படும் அளவிற்கு அபிவிருத்தி எதனையும் பெற்றுத்தரவில்லை. எமது கிராமத்தில் முன்பள்ளி, மாதர் சங்கம் போன்ற சமூகமட்ட அமைப்புக்கள் இயங்குகின்ற நிலையில் குறித்த அமைப்புக்களுக்கான தேவைகளை இதுவரை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்தனர்.

எனவேதான் இனியாவது மக்கள் தேவையை உணர்ந்து அரசியல்வாதிகளும் பிரதேச அதிகாரிகளும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-10)

# வீதி விளக்குகள் பொருத்தல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் வீதி விளக்குகள் பொருத்தும் பணி இடம்பெற்று வருகிறது. முதற்கட்டமாக கொடிகாமம் மத்தி, கொடிகாமம் நகரம் மற்றும் வடக்கு மிருசுவில் பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையில் உள்ள 31 உறுப்பினர்களுக்கும் அபிவிருத்திக்கென தலா நான்கு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# யாழ்.மாவட்டத்தில் அதிக வறுமையை கோப்பாய் பிரதேசமே கொண்டுள்ளது

## தவிசாளர் நிரோஷ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வறுமையை வெல்வதற்கான உத்தியாக சமுர்த்தியைக் கையாள வேண்டிய பொறுப்பு கல்வியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், பிரஜைகள் என சகல தரப்பிடமும் காணப்படுவதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 1840 பயனாளிகளுக்கு சமுர்த்தி வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வறுமை ஒழிப்புக்காக அரசின் கொள்கையாக உருவாக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகவே சமுர்த்தித் திட்டம் அமைகின்றது. இச் சமுர்த்தித் திட்டம் என்பது நிவாரணம் அல்ல. மாறாக குடும்பங்களை வறுமையில் இருந்து மீள்விப்பதற்கான உத்திகள் அடங்கிய செயற்றிட்டமாகும். போரின் பின்னர் பல்வேறு நெருக்கடிகளை கொண்டவர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏனைய பிரதேசங்களைக் காட்டிலும் கோப்பாய் பிரதேசமே யாழ்.மாவட்டத்தில் வறுமை நிலையில் அதிகமான பிரதேசமாக உள்ளது. எமது கோப்பாய் பிரதேசத்திலேயே சமுர்த்தி பெறும் குடும்பங்கள் அதிகமாகவுள்ளன. ஏறா சரியாக 23 ஆயிரம் குடும்பங்கள் இப்பிரதேசத்தில் வசிக்கின்றன. இக் குடும்பங்களில் 7239 குடும்பங்கள் ஏற்கனவே சமுர்த்தி பெறுகின்றன. இந் நிலையில் மேலும் 1840 குடும்பங்கள் சமுர்த்திக்குத் தகுதி பெறுகின்றன.

எனவே எமது பிரதே சத்தில் 9 ஆயிரத்து 36 பேர் சமுர்த்தி பெறுகின்றனர் என்றால் நாம் தான் யாழ். மாவட்டத்தி லேயே அதிக வறுமை நிலைக் குள் வாழ்கின்றோம் என்பது புலனாகின்றது. இவ் வறுமைக்கு எமது மக்களுடைய முயற்சியற்ற போக்குகள் காரணமல்ல.

எமது இனத்தின் மீது வலிந்து திணிக்கப்பட்ட அடக்கு முறைகளும் ஒடுக்குமுறைகளும் எம்மை நிர்க்கதியாக்கிய யுத்தமும் பிரதான காரணங்களாக அமைகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழர் பிரச்சினை உள்ளடங்கலான அறிக்கை மகிந்தவிடம் கையளிப்பு

## நிறைவேற்றுவார் என்கிறார் திஸ்ஸ



(கொழும்பு)

சிறுபான்மைத் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பிலும் அதனை தீர்க்க உதவும் மூலோபாயங்கள் அடங்கிய அறிக்கையை முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் அவரது இல்லத்தில் வைத்துக் கையளித்தார்.

இவ் அறிக்கை இலங்கையின் சமகாலப் பிரச்சினை தொடர்பில் 28 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தியதாகவும் அதனை தீர்க்க எவ்வாறான நடைமுறைகளை கையாள வேண்டுமெனத் தெரிவிக்கப் பட்டிருப்பதுடன் குறித்த அறிக்கையை பார்வையிட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்ததும் குறித்த பிரச்சினை தொடர்பில் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார் என திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இவ் அறிக்கையில் இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்கள் தொடர்பில் மூன்று முக்கிய விடயங்கள் வலியுறுத் தப்பட்டுள்ளன.

இதில் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் மகிந்த அரசாங்கத்தில் அமைக்கப்பட்ட சர்வகட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 13 அரசியல் கட்சிகளைப் பிரிநிதித்துவப்படுத்துபவர்கள் கலந்து கொண்ட போதும் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பன கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் குறித்த கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்று தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டும்.

மேலும் மலையகத்தமிழர் எதிர்நோக்கும் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மலையகக் கூட்டுறவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்களும் அங்கத்தவர்களாய் இணைக்க வேண்டும்.

தேயிலைத் தோட்டத்தால் பெறப்படும் இலாபங்களின் ஒரு பகுதியை முதலாளிமார் சம்மேளனம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தில் அதிகரித்துள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களால் வெளிநாட்டவர்களே முதலாளிகளாக உயர்வடைகின்றனர்.

இதனைத் தடுக்கும் முகமாக உள்ளூர் பாமர மக்களை ஊக்குவிக்க விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் போன்ற 28 அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய அறிக்கையை முன்னாள் ஜனாதிபதியிடம் திஸ்ஸ விதாரண கையளித்தார். (இ-10)

# தேரரை மிரட்டி 100 மில்லியன் கப்பம் கோரிய மூவர் கைது

(கொழும்பு)

தம்புள்ள ரஜமஹா விகாரையின் விகாராதிபதியை மிரட்டி, 100 மில்லியன் ரூபா கப்பம் கோரிய மூவர் தம்புள்ள பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

விகாராதிபதிக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, ஜவாஹத் என்ற அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி கப்பம் கோரிய மூவர் தொடர்பில், பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, முன்னெடுக்கப்பட்ட நீண்ட விசாரணைகளையடுத்து சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த மே மாதம் 20ஆம் திகதியே சந்தேக நபர்கள் விகாராதிபதிக்கு மிரட்டல் விடுத்ததுடன் கைதுசெய்யப்பட்ட மூவரும் 25, 19, 34 வயதுடையவர்கள் எனத் தெரிவித்துள்ள, பொலிஸார் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# வடக்கு, கிழக்கிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு 1001 துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைப்பு





கிளி.மாவட்ட மக்கள் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கு 1001 துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது. கிளி.மக்கள் அமைப்பு கடந்த மார்ச் மாதம் லண்டனில் நடத்திய ஒன்று கூடல் நிகழ்வில் கிளி மக்கள் அமைப்பால் 500 துவிச்சக்கர வண்டிகள் சேகரித்து பாடசாலை செல்ல சிரமப்படும் மாணவர்களுக்கு வழங்கும் திட்டம் பரிந்துரைக்க பட்டதனை அடுத்து 1001 துவிச்சக்கர வண்டிகள் சேகரிக் கப்பட்டுள்ளன.

1001 துவிச்சக்கர வண்டிகளை புலம் பெயர்ந்து வாழும் கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த கொடையாளிகள், ஏனைய பிரதேசத்தை சேர்ந்த கொடையாளிகளின் பங்களிப்புடனும் , தாயக தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடனும் வடக்கு- கிழக்கை சேர்ந்த மாணவர்களுக்கு நேற்று வழங்கி வைக்கப்பட்டது. (9-312)


எங்கள் தாத்தாவுக்கு....

60ஆவது அகவைநாள் வாழ்த்துக்கள்



மகேசன் கஜேந்திரன்

அதிபர் - நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

அன்புடன்

பேரப்பிள்ளைகள்

கபிலன் சாகித்யா, கபிலன் ஷகித்

சிபி அட்சயன்

10.06.2019



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 40 ¼செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:படித்தபெண் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9765 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 38<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/5215 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 3<br>உயரம்: 5'3" தகைமை/தொழில்:B.Sc, Software Engineer, Australia<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுPR<br>தொ.இ: B/9767 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 5 ¼ சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L, NCAT<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/5231 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L,வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: A/L,IT படித்த பெண் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9769 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதனியார்சொந்ததொழில் (உள்நாடு)<br>தொ.இ: G/5249 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Dip.in Journalism, Page Maker<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9772 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 36 ¼<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Dip. Youth Development & Computer Science<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/5279 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## பயங்கரவாதத்துக்குத் துணைபோன விவகாரம்

# றிசாத்துக்கு எதிராக பல்வேறு ஆதாரங்கள்

# குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் நாளை ஒப்படைப்பு

## விமலின் கட்சி விடாப்பிடி





**(கொழும்பு)**

**பயங்கரவாதத்துக்குத் துணைபோன விவகாரம் குறித்து முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான றிசாத் பதியுதீனுக்கு எதிராகத் தம்மிடம் பல்வேறு ஆதாரங்கள் காணப்படுவதாகவும் அவற்றை நாளை 11 ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்தது. மேலும், இதனால் றிசாத் தொடர்பான பல்வேறு விடயங்கள் வெளியுலகிற்கு தெரியவரும் என்றும் அந்தக் கட்சி தெரிவித்தது.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட அந்தக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் மொஹமட் முஸம்மில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த அமைச்சர்கள், தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவே தாங்களது பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துகொண்டனர். இதனைத் தற்போது அனைத்துச் சமூகத்திற்காகவும் மேற்கொண்டதாக அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் குற்றங்கள் முன்வைக்கப்படவில்லை. மாறாக றிசாத் பதியுதீன், ஹிஸ்புல்லா, அசாத் சாலி, முஜிபுர் ரஹ்மான் போன்றோர் மீதே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து றிசாத் பதியுதீன் மீது படிந்த இரத்தக்கறையை, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் பூசும் வகையில்தான் முஸ்லிம் பிரதிநிதிகள் இராஜினாமா செய்தனர். இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரவூப் ஹக்கீமுக்கு இராஜினாமா செய்ய வேண்டிய தேவை ஏன் உள்ளது?

அதாவது, அரசியலில் அவர் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டுமெனில், இனவாத சக்தியொன்று அவசியமாகும். இதற்காகவே, அவர் இராஜினாமா செய்துகொண்டார்.

இது ஒரு அரசியல் விளையாட்டாகவே கருதப்படுகிறது. முஸ்லிம் சமூகத்திற்கு இதனால் ஏற்பட்டுள்ள அவப்பெயருக்கு இராஜினாமா செய்த அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் பதில் கூறவேண்டும்.

றிசாத் பதியுதீன் நல்லவர் போல கருத்து வெளியிடுகிறார். இவருக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தகவல்கள் எமக்குத் தற்போது கிடைத்துள்ளன.

அந்தவகையில், நாளை 11 ஆம் திகதி எமக்குக் கிடைத்த இந்தத் தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அப்போது அனைத்து விடயங்களும் வெளிவரும்.

பயங்கரவாதத்தைப் பாதுகாக்க அவர் எவ்வாறு செயற்பட்டார் என்பதை எல்லாம் மக்கள் அதன் பின்னர் அறிந்துகொள்வார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பௌத்த பீடங்களின் ஆலோசனைக்கேற்ப புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

பௌத்த பீடங்கள் மூன்றின் சங்க சபையால் முன்வைக்கப்பட்ட 15 அம்ச திட்டத்திற்கு ஏற்ப, புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மல்வத்து பீட போதகர் நியாங்கொட விஜிதசிறி தேரரை சந்தித்து விட்டு, ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலக தேவையில்லையென மூன்று பீடங்களும் இணைந்து எடுத்துள்ள தீர்மானத்தை தான் பாராட்டுவதாகவும் பிரதமர் தெரிவித்தார். (இ-7)

# அரசியல் காரணிகளை மையப்படுத்தி ஒருபோதும் தீவிரவாதத்தை இல்லாதொழிக்க முடியாது-சம்பிக்க

(கொழும்பு)

சர்வதேச தீவிரவாதத்தை முழுமையாக துடைத்தெறிய வேண்டுமாயின் சட்டங்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அரசியல் காரணிகளை மையப்படுத்தி ஒருபோதும் அடிப்படைவாத தீவிரவாதத்தை இல்லாதொழிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

பௌத்த பிக்குமார்களை ஒன்றுபடுத்தி நேற்று முன்தினம் கொழும்பில் "ஜாதிக மக" என்ற தொனிப்பொருளில் தீவிரவாதத் தாக்குதல் தொடர்பில் தெளிவுபடுத்தல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்திய சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் அழிவடைந்திருந்தாலும் இன்றும் இவர்களின் நோக்கம் மக்களோடு மக்களாக பரவியுள்ளது. தேசிய நல்லிணக்கத்தை விரும்பும் சாதாரண முஸ்லிம் மக்களுடன் ஊடுருவியிருக்கும் அடிப்படைவாதிகள் விரைவில் அடையாளப்படுத்தப்படுவார்கள். இஸ்லாம் மார்க்கத்திற்கு அப்பாற் சென்று மனிதாபிமானத்திற்கு எதிராகச் செயற்படும் அடிப்படைவாதிகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆபத்தானவர்கள்.

இன்று பாராளுமன்றத்தில் அடிப்படைவாதத்தை இல்லாதொழிப்பதற்கு உரிய விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மத்ரஸா கற்கை நிலையம் , வெளிநாட்டு மத போதகர்களின் வருகை , உள்நாட்டு தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிடைக்கப் பெறும் நிதி, தேசிய கலாசாரத்திற்கும், தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் விடும் ஆடைகள் தொடர்பில் புதிய சட்டங்களை அமுல்படுத்துவதற்கு கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.



இஸ்லாமிய அடிப்படைவாதம் இந்த அரசாங்கத்திலேயே வலுப்பெற்றது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முதலில் அனைவரும் அரசியல் இலாபங்களைத் துறக்க வேண்டும். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒன்றிணைந்து புதிய சட்டங்களை வகுத்து சர்வதேச தீவிரவாதத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்றும் சம்பிக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்-மன்னப்பெரும



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஊடகங்களுக்கு திறக்கப்பட்டுள்ளமை பிரச்சினை அல்லவெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## தமிழ்மொழிக்கு முதலிடம்

# அரபு மொழிச் சொற்களை அகற்றுவதற்கு தீர்மானம்!

## மட்டு. மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்.



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ் மொழியை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் அரபு மொழிச் சொற்களை அகற்றுதல் தொடர்பான பல்வேறு பிரேரணைகள் மட்டக்களப்பு மாநகர சபையின் 20 ஆவது பொது அமர்வின் போது நிறைவேற்றப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபையின் 20 ஆவது பொது அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த அமர்வில், மாநகர எல்லைக்குட்பட்ட பதாகைகளில் தமிழ்மொழியை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் காத்தான்குடி வரவேற்பு வளைவில் உள்ள அரபு மொழிச் சொற்களை அகற்றுதல் தொடர்பான பல்வேறு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

இந்த அமர்வு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றதுடன் இதில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர உதவி ஆணையாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, மாநகரசபை உறுப்பினர் தவராஜாவால் தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டது.

அத்துடன், மாநகரசபைக்குட்பட்ட பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அரசகரும மொழி தவிர்ந்த ஏனைய மொழிகள் அகற்றப்படல் வேண்டும் என்ற பிரேரணைகள் மாநகரசபை உறுப்பினர்களான வே.பூபாளராஜா, கு.காந்தராஜா ஆகியோரால் முன்வைக்கப்பட்டன.

இதன் பிரகாரம் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கில் அரச மொழியாக தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும் என்கின்ற விடயம் அரச அதிகாரிகளால் பின்பற்றப்படுவதில்லை என தவராஜா குறிப்பிட்டார். அத்துடன் இருப்பினும் மாநகரசபை ஊடாக எம்மால் பிரேரணை நிறைவேற்றப்பட்டு உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதன் மூலம் தமிழ்மொழி அமுலாக்கலை நடைமுறைப்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

அதனடிப்படையில் வியாபார நிலையங்களில் பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி முன்னுரிமைப்படுத்தப்படாமை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும் அரச கரும மொழிகள் இல்லாத மொழிகள் பிரயோகிப்பது குறித்து மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச எல்லையில் காணப்படும் வரவேற்பு வளைவில் உள்ள அராபிய எழுத்துக்கள் அகற்றப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து வியாபார நிலையங்களின் பதாகைகளில் தமிழ் மொழி பிரதானப்படுத்துவது தொடர்பாக வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துவதுடன், அரச அலுவலகங்களின் பிரதானிகளுக்கும் நிறைவேற்றப்படுகின்ற பிரேரணை குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதாக மாநகர முதல்வர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து காத்தான்குடி மட்டக்களப்பு எல்லையில் அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவில் உள்ள அரபு மொழி அகற்றப்படுவது குறித்து தமது அறிக்கையை முன்வைப்பதுடன் பிரதமரின் சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு காத்தான் குடி நகர சபைக்கு அறிக்கை அனுப்புவதாகவும் முதல்வர் தெரிவித்தார். (இ-7)

# பொதுஜன பெரமுனவே பிரதான அரசியல் கட்சி

## டளஸ் கூறுகிறார்



(மாத்தறை)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே நாட்டின் பிரதான அரசியல் கட்சி என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாங்கள் இன்னும் கூட்டணியை ஏற்படுத்தவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில் எனக்கு ஒரு நிலைப்பாடு உள்ளது. எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக ஒரு நிலைப்பாடு உள்ளது.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு ஒரு நிலைப்பாடு இருக்கலாம். ஏனைய கட்சிகளுக்கும் அப்படியான நிலைப்பாடுகள் இருக்கலாம். அதனை நாங்கள் மதிக்கின்றோம். நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கும் உரிமைகளை ஏற்றுக் கொள்கிறோம்.

எனினும் இறுதியில் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இலங்கையின் தற்போதுள்ள பிரதான அரசியல் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பதை உயர்தரத்தில் அரசியல் விஞ்ஞானப்பாடத்தை பயிலும் மாணவர்கள் கூட அறிவார்கள்.

இதனால், எமக்கு ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. இந்த நிலைப்பாட்டுக்கு அமைய எம்முடன் கூட்டணி ஏற்படுத்த விரும்பும் கட்சியை நாம் கூட்டணியில் ஏற்றுக்கொள்வோம். இது சாதாரணமான அரசியல் விடயம் எனவும் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார். (இ-7)

## குறை'களை' பதிகம் 38

### யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பின்வீதி தாருக்காய் தவம்கிடப்பதை அறிவீரோ?



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பின் வீதி
யார் கண் பட்டதோ - இன்று
வாழ்விழந்து வறண்டு கிடக்கிறது

நல்லாய்க் கிடந்த வீதியை
கிண்டிக் கிளறி
கருங்கல்லைக் கொட்டி
நாசமறுத்துப் போட்டியளே என்று
போவோர் வருவோர் எல்லாம்
பொரிந்து தள்ளுகிறார்

பள்ளிக்கூடத்தின்
மைதான வீதியது
அன்பொளி எனும் கல்வி நிலையமும்
இதில் தான் இருக்கிறது
ஆயிரம் பிள்ளைகள் வந்து போகுமிடம்

நாட்கள் கிழமையாகி
கிழமைகள் மாதங்களாகியும்
ஆரும் எட்டிப்பார்க்கவுமில்லை
என்ன ஏதெண்டு கேட்கவுமில்லை
கொட்டிய கல்லோ தாருக்காய் தவம் கிடக்கிறது

பிள்ளைகளைக் கூட்டிவந்த பெற்றோர்
எத்தனை பேர் தடுக்கி விழுந்ததை தெரியுமோ
கண்டறியாத கம்பறெலிய என்று
தலையில் அடித்த பெரியவர் ஒருத்தர்
தடுக்கியபடி தள்ளாடிச் சென்றார்

நல்லதுதான் வீதி நல்லதுதான்
மக்கள் மனமறிந்து
நிலையறிந்து துரிதகதியில்
முடித்திருந்தால் நல்லதுதான்

முடிக்கவில்லையே
முடியவுமில்லையே
கிண்டியதும் கிளறியதும்
கொட்டியதும் குவித்ததும்
பரவியதும் சிதறியதும்
மாணவர், பெற்றோர்
பொதுமக்கள் எனப் பலரை
படும்பாடு படுத்துகிறதே

அதிகாரிகளே அசமந்தம் வேண்டாம்
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
பின் வீதியை கொஞ்சம் எட்டிப்பாரும்
தாரை ஊற்றி செப்பனிட
பணியும் பணித்திடும்
இதைத் தான் மக்கள்- உம்மிடம்
பணிவாய்க் கேட்கிறார்

மாவை.நா.கஜேந்திரன்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# வவு. வடக்கு காணிப்பிணக்குகளுக்கு விரைவில் தீர்வு- காணி மத்தியஸ்தர் சபை

## வனவள திணைக்களத்துக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் பதிவு

வவுனியா வடக்கு காணிப் பிணக்குகள் தொடர்பான 55 முறைப்பாடுகள் தொடர்பில் கலந் துரையாடப்பட்டுள்ளதுடன், 25 புதிய முறைப்பாடுகளும் கிடைக் கப்பெற்றுள்ளதாகவும் அவற்று க்கு விரைவில் தீர்வு கணப்படும் எனவும் வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபை தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, வவுனியா வடக்கு பகுதியில் உள்ள காணி உரிமம் மற்றும் உரிமை, காணி ஆவ ணம், காணி எல்லைப் பிரச் சனை உள்ளிட்ட காணி தொடர் பான பிணக்குகளை தீர்த்து வைக்கும் முகமாக 55 முறைப் பாடுகள் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடப்பட்டுள்ளது.

சன்னாசிபரந்தன், குறிசுட்ட குளம் ஆகிய பகுதிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடு களில் அதிகமானவை வனவள திணைக்களத்திற்கு எதிரான வையாகும். குறித்த முறைப் பாடுகள் தொடர்பான விசார ணைகளை மேற்கொள்ள வவு னியா வடக்கு வனவள திணை க்கள அதிகாரிகள், வவுனியா வடக்கு காணி உத்தியோகத்தர் ஆகியோர் பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். இவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்படவு ள்ளது.

வவுனியா வடக்கில் முதன் முதலாக இடம்பெற்ற காணி மத்தியஸ்தர் சபை அமர்வில் வவுனியா வடக்கு பிரதேச செய லாளர் க.பரந்தாமன், உதவிப் பிரதேச செயலாளர் த.தர்மேந் திரா, வனவள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இது தவிர, காணிப்பிணக்கு கள் தொடர்பாக வவுனியா வடக் கின் அடுத்த அமர்வு எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதி சனிக் கிழமை இடம்பெறும்.

புதிதாக முறைப்பாடுகளை செய்ய விரும்புவோர் அன்றைய தினம் காலை 9 மணியில் இரு ந்து ஒரு மணிவரை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (9-250)

# முல்லை. நீராவியடி விநாயகர் ஆலய விவகாரம்

## இந்து சமய விவகார அமைச்சர் தலைமையில் இன்று கலந்துரையாடல்

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு நீராவியடி விநாயகர் ஆலய விவகாரம் தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் இன்று முல்லைத் தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்ய வுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வர னுக்கு, தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும்,தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் விடுத்துள்ள பணிப்புரைகளின் அடிப்படையில் மேற்குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செய லகத்தில் பிற்பகல் 2.30 மணி க்கு முல்லைத்தீவு நீராவியடி விநாயகர் ஆலய விவகாரம் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதேவேளை திருகோணமலை மாவட்ட செய லகத்தில் காலை 8.30 மணிக்கு திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலய விவகாரம் தொடர்பிலும், கலந்துரையாடப்படவுள்ளது. (9)



உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு உடையார்கட்டுப் பகுதி மணல் அகழ்வு உரிமையாளரால், புவிச் சரிதவியல் அளவைகள், சுரங்கங்கள் பணியகத்தின் ஏற்பாட்டில் உடையார்கட்டு குரவயலில் அமைந்துள்ள பாரதி முன்பள்ளி நிலையத்தில் கடந்த வாரம் மர நடுகை நிகழ்வு நடை பெற்றது. இந் நிகழ்வில் புவிச் சரிதவியல் அளவைகள் சுரங்கங்கள் பணியகத்தின் பொறியியலாளர், உறுப்பினர்கள், முன் பள்ளி இணைப்பாளர்,புதுக் குடியிருப்பு பிரதேச செயலக உறுப் பினர்கள், பொலிஸார் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கொல்கள குழியில் வீழ்ந்து பலியானவர்களுக்கு நகரசபையில் அஞ்சலி



வவுனியா நகரசபையின் கொல்கள குழியொன்றினுள் கடமையின் போது வீழ்ந்து பலி யான நகரசபை ஊழியர்களின் 45 ஆம் நாள் நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக் கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கடமையின் நிமிர்த்தம் மாடு வெட்டும் கொல்களத்தில் குழியொன்றினை துப்புரவு செய் யும் பணியின் போது 4 ஊழி யர்கள் விசவாயு தாக்கத்திற் குள்ளாகி பலியாகியிருந்தனர்.

புதிய அரச பொது ஊழியர் சங்கத்தினால் இவ் ஊழியர் களுக்கான நினைவு தினம் வவுனியா நகரசபை மண்ட பத்தில் நேற்று முன்தினம் அனு ஷ்டிக்கப்பட்டது.

அச் சங்க த்தின் தலை வர் செ. செல் வேந்திரன் தலை மை யில் இடம் பெற்ற இந் நிகழ் வில் மதத் தலைவர்கள், வன்னி பாரா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் பாரா ளு மன்ற உறுப்பினர் வினோநோத ராதலிங்கம், நகரசபை தலைவர் இ.கௌதமன், நகரசபை உறுப் பினர்கள், தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள், தமிழ் விருட் சத்தின் தலைவர் மற்றும் உயிரி ழந்தவர்களின் குடும்ப உறுப்பி னர்கள் உட்பட பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டி ருந்தனர். (9-250)




## ஹெரோயினுடன் ஒருவர் கைது

வவுனியாவில் தேக்கவத் தைப் பகுதியில் ஹெரோயின் தூளினை தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக வவுனியா பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை தேக்கவத் தைப் பகுதி யில் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஹெரோயின் தூளினை தனது உடைமையில் வைத்தி ருந்த 45 வயது உடைய நபர் ஒருவரை கைது செய்துள்ள தாகவும், அவரிடமிருந்து 2 கிராம் 170மில்லிக்கிராம் ஹெரோ யின் தூள் மீட்கப்பட்டுள் ளதாக வும் பொலிஸார் தெரிவித்தனர். மேல திக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதி மன்றத்தில் முற் படுத்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (9-250)

## சமுர்த்தி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

பூநகரி பிரதேச செயலர் பிரி வில் புதிதாக சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்ட 1994 குடும் பத்தவர்களுக்கு சமுர்த்தி சான் றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று பூநகரி பிரதேச செயலக மகா நாட்டு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ் னேந்திரன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன், யாழ்.மாவட்ட நாடாளும ன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் உட்பட பலர் கலந்து கொண்ட னர். (9-84)

# யுத்தத்தால் துன்பப்பட்ட மக்களை இராணுவ நெருக்கடியிலிருந்து விடுவியுங்கள்

## ஜனாதிபதிக்கு சிவகரன் கடிதம்

வட பகுதி மக்களை தொடர் ந்தும் இராணுவ அடக்கு முறை க்குள் உட்படுத்துவது தான் நோக் கமா என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் கேள்வி எழுப்பி ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவிற்கு கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். குறித்த கடித்தில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பல்வேறு விதமான சோதனைச் சாவடிக்குள் துன்ப துயரத்தை அனுபவித்த தமிழ் மக்களுக்கு மீண்டும் ஏன் இந்த வேதனையான சோதனை?

கடந்த ஈஸ்டர் தாக்குதலில் வடக்கில் எந்தவிதமான அசம் பாவிதங்களும் நிகழவில்லை என்பது தாங்கள் அறிந்ததே. அப் படியானால் ஏன் இங்கே அடுக்க டுக்கான சோதனைச் சாவடிகள்.

வடபகுதி மக்களை தொடர்ந் தும் இராணுவ அடக்கு முறைக் குள் உட்படுத்துவது தான் நோக் கமா? ஈஸ்டர் தாக்குதல் நடை பெற்ற சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதியில் இவ்வாறான நெருக்கடிகள் இல்லை.

அப்படியென்றால் இலங்கை யில் இரண்டு நாடுகள் உண்டா? சட்டம் யாவருக்கும் சமமல் லவா? உங்கள் அகராதியில் பயங்கரவாதத்தில் ஈடுபடுவது சிறுபான்மை இனத்தவர் மட் டுமா? தமிழர்களை சிங்கள பய ங்கரவாதம், இன அழிப்புச் செய் யவில்லையா? 80கிலோ மீற்றர் பயணத்திற்கு 5 இடத்தில் சோத னைச்சாவடி. நீங்கள் ஒருமுறை சாமானிய மக்கள் போல பய ணித்துப்பாருங்கள் வலி புரியும். சகல வலிகளையும் அனுபவித்து நசுக்கப்பட்டு இரண்டாம் தர பிரஜையாக வாழ வேண்டும் என்பதா? பௌத்த தேசிய வாதத் தின் எழுதப்படாத விதி? பாட சாலைச் சோதனை மிக அருவ ருப்பாக உள்ளது. பாவம் மாண வர்கள். வெறுப்புணர்வை ஏற்படு த்தாதீர்கள். தேசிய பாதுகாப்பில் அக்கறையின்றி இந்த நாட்டில் ஒக்டோபர் 26க்கு பின்னர் இர ண்டு அரசாங்கம் உள்ளதா? உங் கள் குடும்பப்பிரச்சினை போல் ஆளுக்காள் அரச நிர்வாகத்தில் முரண்படுவது கேலிக் கூத்தானது. அதுதான் தாக்கு தலுக்கு முக்கிய காரணம். எம்மை சுதந்திரமாக அன்றாடப் பணிகளில் ஈடுபட வழிவகுங்கள்.

அடக்குமுறை விபரீதத் தையே ஏற்படுத்தும். மனகிலே சத்தை வலிமைப்படுத்தும். பயங் கரவாதத்துடன் தொடர்புடைய வர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள். எல்லா இஸ்லாமியர்க ளையும் பயங்கரவாதிகளாக நோக்காதீர்கள். இந்த சோத னைச் சாவடிகளால் ஏதாவது ஒரு பயன் கிடைத்ததா? பயங்கரவா திகளும், வன்முறை யாளர்க ளும் பகிரங்கமாக பொது வெளி யில் நடமாடுவார்களா? பலவீன மான புலனாய்வு கட்டமைப்பும். ஒழுங்கற்ற ஊழல் நிர்வாக கட்ட மைப்பும் தான் இந்த நாட்டில் உள்ளது. அதை முதலில் சீர் செய்யுங்கள்.

எனவே சோதனைச் சாவடி களை குறையுங்கள். யுத்தத்தால் துன்பப்பட்ட மக்களை வருத்தா தீர்கள். இராணுவ நெருக்கடியி லிருந்து மக்களை விடுவியுங் கள். ஜனநாயக சிவில் இடை வெளியை மழுங்கடித்து விட்டீர் கள்.

ஆகவே எமது வேண்டு கையை சாதகமாக பரிசீலிக்கு மாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (9-285)



வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீலக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்த பொங் கல் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை அமைதியான முறையில் இராணுவ பாது காப்புடன் நடைபெற்றது. வவுனியா சிந்தா மணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தூக்கு காவடிகள், பறவை காவடிகள், பாற்செம்புகள், தீச்சட்டி, காவடி கள் போன்றன வவுனியா நகர வீதி வழி யாக ஆலயத்தை சென்றடைந்தது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்-குருமன்காடு செய்தியாளர்)

# விசுவமடுவில் யானை வேலி அமைப்பதை தடுத்து நிறுத்திய வனவளத்திணைக்களத்தினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு பகுதியில் யானை வேலி அமைப்பதற்கான தொடக்க நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முன்னெ டுக்கப்பட்ட போதும் அதனை வன வளத்திணைக்களத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியின் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் விசுவமடு பகுதியில் 22 கிலோமீற்றர் தூரம் யானை வேலி அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் யானை வேலி அமைப்பதற்கான பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்மடு குளப்பகுதியில் இருந்து இடைக்காடு குளம் வரையிலான 22 கிலோமீற்றர் தூரம் யானை வேலி அமைப்பதற்கு 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.புனித குமார், வட்டார வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி இ.டி.கேமஜித் அனுப்பிரிய, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.சுகந்தன்,பிரபாகரன் மற்றும் கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கிராம அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் முன்னிலையில் வேலி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

கனரக இயந்திரங்கள் கொண்டு யானை வேலி அமைப்பதற்கு பாதை அமைக்கும் வேலைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அந்தப் பகுதிக்கு வந்த வனவளத் திணைக்களத்தினர் காடுகளை அழிக்க வேண்டாம் என தலையிட்டு அதனை நிறுத்தியுள்ளார்கள்.

குறித்த பகுதியில் யானை வேலி அமைப்பதற்கான கனரக இயந்திரம் கொண்டு காடுகளை அழிப்பதாகவும் அதற்கான அனுமதி இல்லை என்றும் அதனை உடனடியாக நிறுத்துமாறும் கோரிய நிலையில் குறித்த வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். (9-281)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(C-6635)



பகிரங்க விரிவுரை

"மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2018 இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை"




2019 யூன் 13 வியாழக்கிழமை
பி.ப. 3.00 மணிக்கு (தமிழ்மொழிமூலம்)

அனுமதி இலவசம்!

கேட்போர்கூடம்,
பொதுநூலகம்,
யாழ்ப்பாணம்.

பேச்சாளர்
திரு.பா.சிவதீபன்,
பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி,
கிளிநொச்சி.

அனைவரும் வருக !!!

பிராந்திய அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி,
அறிவியல்நகர், கிளிநொச்சி.

தொலைபேசி : 021 228 5912/4
தொலைநகல் : 021 228 5911
மின்னஞ்சல் : rokn@cbsl.lk

(C-6623)



10:06:2019 அறுபதாம் அகவை நாளில் ஓய்வு பெறும் எங்கள் அதிபரை வாழ்த்துகின்றோம்



மகேசன் கஜேந்திரன்
B.A Sc & Maths Trd SLPS - 1
அதிபர் யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

சேவை விபரம்

முதல் நியமனம் : பயிற்றப்படாத ஆங்கில ஆசிரியர் 1984.01.01
பயிற்றப்பட்ட விஞ்ஞான கணித ஆசிரியர் 1990.01.01
அதிபர் நியமனம் : தரம் 2 - 11 (போட்டிப்பரீட்சை) - 2002.01.01

ஆசிரியர் சேவை

வ/பாலமோட்டை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை 84.01.01 - 89.08.17
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி 89.08.18 - 92.08.17
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 92.08.18 - 2006.01.17

அதிபர் சேவை

யா/திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் 2006.01.18 - 2008.01.17
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் 2008.01.18-2019.06.10




இன்முகம் இனிய வார்த்தை இனியவே யார்க்கும் செய்யும்
நன்மனம் பாடசாலை நலமதே நாடிநிற்கும்
எண்ணமே இலக்காய்க் கொண்ட ஏற்றமாம் திட்டத்தோடு
நன்னெனும் கல்விதனில் பிள்ளைகள் உயர வேண்டி
தன்னலம் எண்ணாச்சிந்தை மாங்கையர்க்கரசித் தாயின்
மைந்தனாய் உழைத்த எங்கள் மதிப்பார்ந்த அதிபர் இன்று
கொண்டதன் பணியிலோய்வு கொண்டிடும் இந்த நாளில்
அன்புள மனைவி மைந்தன் மகளொடு மருகர் பேரர்
என்றுள யாரும் வாழ்வில் ஏற்றமே பெற்று நாளை
சிந்தைசேர் சிறப்பினோடு சீரெலாம் பெற்று என்றும்
பிள்ளையார் கந்தனோடு அன்னையாம் கௌரி அம்பாள்
அருளுடை மகேசன் ஞானவைரவர் துணையும் காக்க
பெருமன அமைதியோடு பேறுகள் கொண்டு வாழ்க.

கவிஞர் -சௌஜி ஷாகரி

(C-6637)

ஆசிரியர் நல்லுறவுக் கழகம், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் 10.06.2019



# பாரதம்

## தமிழகத்தில் பா.ஜ.க.தோல்வி; நானே பொறுப்பேற்கிறேன்

### பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(தூத்துக்குடி)

தமிழகத்தில் பா.ஜ.க. தோல்வியடைந்தமைக்கு நானே பொறுப்பேற்கிறேன் என முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பொன்.ராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது.

மேலும் தற்போது தமிழகத்தில் வெற்றியடைந்துள்ள தி.மு.க. - காங்கிரஸ் மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் கோடீஸ்வரர்கள். அவர்கள் மக்களுக்காக தங்களது சொந்த பணத்தை செலவிடுவார்களா?

தமிழகத்தில் மோடியின் விளைத்திறனான திட்டங்களை உரிய முறையில் மக்களுக்கு கொண்டு சேர்க்காதமையை பா.ஜ.க. தோல்வியை தழுவியமைக்கு காரணமாகும்.

ஆகையால் அந்தத் தோல்வியை நானே பொறுப்பேற்கிறேன்" என மேலும் தெரிவித்துள்ளார். (7)

## டுபாய் பஸ் விபத்தில் உயிரிழந்த 11 இந்தியர்களின் உடல்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன



(டுபாய்)

17 உயிர்களை பறித்த டுபாய் பஸ் விபத்தில் இறந்த 11 இந்தியர்களின் உடல்கள் விமானம் மூலம் நேற்று மும்பைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஒருவரின் உடல் மட்டும் வளைகுடா நாட்டில் தகனம் செய்யப்பட்டது.

ஓமன் நாட்டு தலைநகரம் மஸ்கட்டில் இருந்து கடந்த 6 ஆம் திகதி மாலை டுபாய் நோக்கிப் பயணிகள் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் வெளிநாட்டவர்கள் உட்பட 30 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

டுபாய் அருகே ராஷிடியா என்ற பகுதியில் வந்தபோது, தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழைந்த பேருந்து விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த விபத்தில் ராஜகோபாலன், பெரோஸ்கான் பதான், ரேஷ்மா பெரோஸ்கான் பதான், தீபக் குமார், ஜமாலுதீன் அரக்கவெட்டில், கிரண் ஜானி, வாசுதேவ், திலக்ராம் ஜவகர் தாக்குர் உட்பட 12 இந்தியர்கள் உயிரிழந்ததாக டுபாயில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறந்த இந்தியர்களின் உடல்களை பதப்படுத்தி, சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கும் செலவை அங்குள்ள இந்திய தூதரகம் ஏற்றது. இதைத்தொடர்ந்து இன்று அதிகாலை சுமார் 3.40 மணியளவில் ஏர் இந்தியா விமானம் மூலம் 11 உடல்கள் ஏற்றி அனுப்பப்பட்டன.

உறவினர்களின் விருப்பத்துக்கிணங்க, சுமார் 22 வயது மதிக்கத்தக்க ஒரு இந்தியரின் உடல் மட்டும் வளைகுடா நாட்டிலேயே தகனம் செய்யப்பட்டது.(7)

## தான் பிறந்தபொழுது உடனிருந்த செவிலியருடன் ராகுல் சந்திப்பு



ராகுல் காந்தி தான் பிறந்த பொழுது உடனிருந்த கேரளாவைச் சேர்ந்த செவிலியரை நேற்று சந்தித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 2 தொகுதிகளில் போட்டியிட்டார். இதில் உத்தர பிரதேசத்தின் அமேதி தொகுதியில் படுதோல்வி அடைந்த ராகுல்காந்தி மற்றொரு தொகுதியான வயநாட்டில் அமோக வெற்றி பெற்றார். இதையடுத்து தேர்தலில் வாக்களித்து வெற்றி பெற வைத்த வயநாடு மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக 3 நாள் பயணமாக கேரளா வந்துள்ள ராகுல்காந்தி, ரோடு ஷோ நடத்தி நன்றி தெரிவித்து வருகிறார். அவருக்கு வழியெங்கிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனிடையே ராகுல் காந்தி பிறந்தபொழுது செவிலியராக பணியாற்றிய ராஜம்மா என்பவரை நேரில் சந்தித்தார். அப்பொழுது பழைய நினைவுகளை பற்றி ராஜம்மாவிடம் பேசினார்.(7)

## சீனாவில் கனமழையால் 5 இலட்சத்திற்கும் மேற்



(பீஜிங்)

**சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஜியாங்சி கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 5 இ வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.**

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள ஜியாங்சி மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமையில் இருந்து சூறைக்காற்றுடன் பரவலான கனமழை பெய்து வருகிறது. நாளை வரை மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த இரு நாட்களாக பெய்த தொடர் மழையின் காரணமாக அம்மாகாணத்துக்கு உட்பட்ட பல இடங்கள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றன. சுமார் 40 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் இருந்த பயிர்கள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கி நாசமடைந்தன.

ஜியாங்சி மாகாணத்துக்கு உட்பட்ட 23 மாவட்டங்களை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. வெள்ளத்தினால் 58 வீடுகள் இடிந்து விழுந்தன. சுமார் 100 வீடுகள் பலத்த

## மீண்டும் திறக்கப்பட்டது வெனி

(கராகஸ்)

வெனிசுவெலா - கொலம்பிய எல்லை மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு மாதங்களின் பின்னர் இந்த எல்லை மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளை அடுத்து, வெனிசுவெலா - கொலம்பிய எல்லையை மூடுமாறு, வெனிசுவெலா ஜனாதிபதி கடந்த பெப்ரவரி மாதம் உத்தரவிட்டிருந்தார்.



இதனால், வெனிசுவெலா மக்களுக்கான உணவு மற்றும் மருந்து விநியோகத்தில் பாரிய சிக்கல் ஏற்பட்டதுடன் பலர்

## காஷ்மீர் பிரச்சினைக்கு

### மோடிக்கு இம்ரான்கான் கடிதம்



# வெளிநாடு

## ல் வெள்ளப்பெருக்கு
## ற்பட்டவர்கள் பாதிப்பு!




### ஞ்சி மாகாணத்தில் சூறைக்காற்றுடன் பெய்த
### 5 இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் இயல்பு

சேதம் அடைந்துள்ளன. பல மாவட்டங்களை இணைக்கும் பிரதான வீதிகளை வெள்ளநீர் அடித்துச் சென்றதால் வாகனப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட நேரடி பொருளாதார இழப்பு சுமார் 10 கோடி அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், கடைகள் மற்றும் வர்த்தக வளாகங்கள் திறக்கப்படாததால் போதிய உணவுப் பொருட்கள் கிடைக்காமல் சுமார் 5 இலட்சத்து 14 ஆயிரம் பேரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## ிசுவெலா-கொலம்பிய எல்லை



நாட்டை விட்டும் வெளியேறியிருந்தனர்.

இந்தநிலையில் தற்போது மீண்டும் எல்லை திறக்கப்பட்டதன் பின்னர் 10,000 இற்கும் மேற்பட்ட மக்கள், தமக்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோவின் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக எதிர்க் கட்சித் தலைவர் ஜுவான் கெய்டோ தம்மைத் தாமே அறிவித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## கு தீர்வு காண தயார்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண்பதற்கு தயாரென பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், பிரதமர் நரேந்திர மோடிக்கு தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இம்ரான்கான் இதனை குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது: "இரண்டாவது முறையாக பிரதமராக பொறுப்பேற்ற நரேந்திர மோடிக்கு, வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இரு நாடுகளும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகளின் ஊடாகவே நிரந்தர தீர்வைப் பெறமுடியும்.

அந்தவகையில் காஷ்மீர் உள்ளிட்ட அனைத்து விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடலில் ஈடுபடத் தயாராக உள்ளோம்" என அக்கடிதத்தில் இம்ரான்கான் குறிப்பிட்டுள்ளார்.

மோடி- இம்ரான்கான் இடையே தனிப்பட்ட சந்திப்பு இல்லையென அண்மையில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம்ரான்கான் இத்தகைய கடிதத்தை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# பஸ்-லொறி மோதி கோர விபத்து 19 பேர் சம்பவ இடத்திலேயே பலி

நைஜீரியா நாட்டின் ஒன்டோ மாநிலத்தில் லொறியுடன் பஸ் நேருக்கு நேர் மோதி தீப்பிடித்த விபத்தில் 19 பேர் உடல் கருகி, பரிதாபமாக உயிரிழந்தனர்.

நைஜீரியா நாட்டின் ஒன்டோ மாநிலத்தில் உள்ள அக்குரே- ஓவோ விரைவு பிரதான வீதி வழியாக நேற்று முன்தினம் மாலை சுமார் 4 மணியளவில் சென்ற பஸ்ஸின் மீது எதிரே வேகமாக வந்த லொறி வீதியில் உள்ள பள்ளத்தை தவிர்ப்பதற்காக லேசாக திரும்பியபோது நிலைதடுமாறி, பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் பஸ் தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் பஸ்ஸில் வந்த 19 பயணிகளும் பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்துக்கு பின்னர் தப்பியோடிய லொறியின் சாரதி மற்றும் கிளீனரை பொலிஸார் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# மாலைதீவில் பிரதமர் மோடிக்கு மிக உயரிய விருது வழங்கல்



(மாலே)

மாலைதீவு நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும் பிரதமர் நரேந்திர மோடிக்கு வெளிநாட்டவருக்கு அளிக்கப்படும் மிக உயரிய 'நிஷான் இஸ்ஸுதீன்' விருதை வழங்கி ஜனாதிபதி அப்துல்லா முஹம்மது சோலிஹ் கௌரவித்தார்.

இருநாள் அரசமுறை பயணமாக நேற்று முன்தினம் மாலை மாலைதீவு சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு முப்படையினரின் அணிவகுப்புடன் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாலைதீவு ஜனாதிபதி உடன் இருநாடுகளுக்கு இடையிலான பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக உயர்மட்ட ஆலோசனை நடத்திய பிரதமர் மோடி, மிகத் தீவிரமான கிரிக்கெட் ரசிகரான மாலைதீவு ஜனாதிபதிக்கு 'கிரிக்கெட் பட்' ஒன்றை நினைவுப் பரிசாக அளித்தார். (7)

# மசூதியில் துப்பாக்கிச்சூடு 5 பேர் பரிதாபமாக மரணம்

(ஏடன்)

ஏமனில் மசூதியில் நுழைந்து அடையாளம் தெரியாத நபர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கும், ஹுவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இதில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 30 இலட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அங்கு அவ்வப்போது பயங்கரவாதத் தாக்குதல்களும் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தாலியா மாகாணத்தில் அசாரிக் மாவட்டத்தில், ஒரு மசூதியில் நேற்று முன்தினம் தொழுகை நடந்து கொண்டிருந்தது. அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் தானியங்கி துப்பாக்கிகளுடன் ஒரு வாகனத்தில் வந்து இறங்கினர். அவர்கள் இறங்கிய வேகத்தில், மசூதியில் நுழைந்து, தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதனால் அங்கிருந்தவர்கள் பதறியடித்தவாறு நாலாபுறமும் ஓட்டம் எடுத்தனர்.

இதற்கிடையே தாக்குதல்களை நடத்தியவர்களும் அங்கிருந்து ஓட்டம் பிடித்து விட்டனர். அவர்கள் தங்களுடன் 3 பேரை கடத்திச்சென்றனர்.

இந்தத் தாக்குதலின்போது, தொழுகையில் ஈடுபட்டிருந்த 5 பேர் உயிரிழந்தனர். சிலர் படுகாயம் அடைந்தனர். (7)

# மாயமான இந்திய விமானம் பற்றித் தகவல் வழங்குவோர்க்கு சன்மானம்-விமானப்படை

(டில்லி)

மாயமான இந்திய விமானம் பற்றிய தகவல் வழங்குவோருக்கு 5 இலட்சம் இந்திய ரூபாய் சன்மானமாக வழங்கப்படுமென விமானப்படை அறிவித்துள்ளது.

விமானத்தை தேடும் பணிகளை 7 ஆவது நாளாக விமானப்படை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்துள்ள போதும், எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்நிலையில் மாயமான விமானம் குறித்து தகவல்களை வழங்குபவர்களுக்கு 5 இலட்சம் இந்திய ரூபாய் சன்மானமாக வழங்கப்படுமென இந்திய விமானப்படையின் எயார் மார்ஷல் ஆர்.டி. மாத்தூர் அறிவித்துள்ளார்.

அந்தவகையில் தகவல்களை 943 649 9477, 940 207 7267, 940 213 2477 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு அளிக்கலாமென விமானப்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலம்- ஜோர்ஹத் விமானப்படை தளத்திலிருந்து அருணாச்சல பிரதேசத்தின் மெஞ் சுகா பகுதியை நோக்கி புறப்பட்டுச் சென்ற இந்திய விமானப்படையின் ஏ.என்-32 ரக விமானம் கடந்த 4 ஆம் திகதி, 13 பேருடன் காணாமல் போயுள்ளது.

இந்நிலையில் காணாமல் போன விமானம் குறித்து எந்தவொரு தகவலும் இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில், இராணுவம் மற்றும் இந்தோ- திபெத் பாதுகாப்பு படையினரும் தேடுதல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# தேசிய பாதுகாப்பை சிதைத்த அரசிற்கு எதிராக 8 மாவட்டங்களில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள்

## மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

இந்த அரசாங்கத்துக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் கொழும்பு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்தார். தேசிய பாதுகாப்பை சிதைத்து, நாட்டை பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கை உட்பட பல்வேறு விடயங்களை முன்னிலைப்படுத்தி ஆரம்பத்தில் 8 மாவட்டங்களில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் மகிந்த தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள அரசாங்கத்தின் நடவடிக்கையால் அதிருப்தியடைந்துள்ள அதிக மானவர்களும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு, காலி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாய்ந்தமருது தாக்குதல்தாரிகளின் டி.என்.ஏ. அறிக்கை அடுத்தவாரம் வெளியீடு



(கொழும்பு)

கல்முனை - சாய்ந்தமருது தற்கொலைதாரிகளின் உடற்பாகங்களிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் மரபணு பரிசோதனை அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும்.

அதற்கமைய குறித்த மரபணு பரிசோதனை அறிக்கை நீதி மன்றம் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும்.

குறித்த மாதிரிகள் நேற்று முன்தினம் சட்ட வைத்திய அதிகாரிகளுடாக அரச இரசாயனத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்திய சஹ்ரானின் உறவினர்களை இந்த மரபணு பரிசோதனை அறிக்கையினூடாக அறிந்துகொள்ள முடியும் என அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட சில பயங்கரவாதிகளின் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சடலங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தோண்டி எடுக்கப்பட்டன.

இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்ட நபர்களின் உடற்பாகங்கள் மரபணு பரிசோதனைகளுக்காக இரசாயன பகுப்பாய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும் அவற்றில் நான்கு நபர்களின் உடற்பாகங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டதால், சடலத்தின் உடற்பாகங்கள் சில மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி கல்முனை சாய்ந்தமருது சுனாமி குடியேற்ற கிராமத்திலுள்ள வீடொன்றில் பாதுகாப்புத் தரப்பினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

இதன்போது பயங்கரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் சஹ்ரானின் உறவினர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட சகல மனுக்களும் ஜூலை 12 விசாரணைக்கு

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட சகல மனுக்களும் அடுத்த மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

குறித்த மனுக்கள் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த மனுக்களை தேசிய முக்கியத்துவம் மிக்க மனுக்களாக கருத்திற்கொண்டு, அவற்றை நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள சட்டமா அதிபர் முன்னர் கோரிக்கை விடுத்தார். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் இதனை அறிவித்தது. (இ-7)

# இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழிக்க இஸ்ரேலின் யமாம் பொலிஸாரின் உதவி கோரல்

(கொழும்பு)

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை இல்லாமல் செய்வதற்கு இஸ்ரேலின் யமாம் பயங்கரவாத ஒழிப்பு பொலிஸாரின் உதவியை வழங்க அந்நாடு முன்வந்துள்ளது.

இஸ்ரேலில் தொழில்பார்க்கும் இலங்கையர்கள், அந்நாட்டிலுள்ள அதிகாரிகளிடம் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து தகவல் வழங்கியதாகவும் இதனையடுத்தே இவ்வாறு தனது பொலிஸ் பிரிவின் மூலம் உதவி வழங்க இஸ்ரேல் இணக்கம் தெரிவித்ததாகவும் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகிலுள்ள பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் இஸ்ரேலின் யமாம் பொலிஸாருக்கு மாத்திரமே பயப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யமாம் பொலிஸார் எந்த இடத்திலிருந்து செயற்படுகின்றார்கள் என்பதை இஸ்ரேல் மக்களே அறியாதுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலால் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சியொன்றும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முயலுக்கு மூன்று கால்

ஒரு ஊரில் ஒரு குருவும் சிஷ்யனும் இருந்தார்கள். ஒரு மாதிரியான குருவும் சிஷ்யனும்.

அந்த சிஷ்யன் ஒரு நாள் முயல் வேட்டைக்கு கிளம்பினான். காட்டிற்குப் போனான். ஒரு முயல் கிடைத்தது. பிடித்துக் கொண்டு வந்தான். நெருப்பிலே சுட்டு அது காலில் ஒன்றை மட்டும் இவன் சாப்பிட்டான். மீதி மூன்று கால் இருந்தது.

அதை கொண்டு போய் தன் குருவிடம் கொடுத்தான். மிகவும் பணிவோடு!

அந்த குரு என்ன, அந்த அளவிற்கு ஒன்றும் தெரியாத அப்பாவியா? மிகவும் ஊக்கமாக, இன்னொரு கால் எங்கே என்று கேட்டார்.

சிஷ்யன் பார்த்தான். நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தானே இருந்தது. என்றான்.

சிஷ்யன் பொய் சொல்லுகின்றான் என்பது குருவுக்குத் தெரிந்து போய் விட்டது. சரி... இவன் சொன்னது தான் சொன்னான். சொன்ன பொய்யை காப்பாற்றுகின்ற சாமர்த்தியமாவது இவனுக்கு உண்டா என்பதை சோதித்து பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அதனால் அப்போதைக்கு அந்த விடயத்தை அப்படியே விட்டு விட்டார். கொஞ்ச நாள் கழித்து சிஷ்யனை கூப்பிட்டு,

நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால் என்று கேட்டார். அவனும் இப்படியே பதில் சொன்னார்.

சரி சிஷ்யன் பரவாயில்லை பொய்யைக் காப்பாற்றுவதிலே மிகவும் பிடிவாதமாக இருக்கின்றான் என்பதனை தெரிந்து கொண்டார். இவனுக்கு இன்னொரு பரீட்சை வைத்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

சிஷ்யனை கூப்பிட்டார். என்ன சுவாமி என்று வந்து நின்றான்.

அவன் நெத்தியிலே அகலமாக ஒரு பொட்டு வைத்தார்.

நீ தினமும் எனக்காக ஒரு காரியம் செய்யணும் என்றார். செய்கின்றேன் என்றார். நீ என்ன செய்ய வேண்டும் என்றால் தினமும் ராஜாவுக்கு வைத்திருக்கின்ற சாப்பாட்டை தெரியாமல் திருடிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விட வேண்டும்! என்றார். இவ்வளவு தானே கவலைப்படாதீங்க என்று சொல்லிவிட்டு அவன் போனான். சொன்னது போல் சாப்பாட்டை தெரியாமல் கொண்டு வந்து விட்டான்.

ஒரு நாள்–இரண்டு நாள் இல்லை தொடர்ந்து அதே போல் செய்ய ஆரம்பித்து விட்டான். ராஜா பார்த்தார். தினமும் தன்னுடைய சாப்பாடு திருட்டுப் போறது அவருக்கு மிகவும் அவமானமாக போய்விட்டது. திருடன் யார் என்பதை கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டார். என்னுடைய சாப்பாட்டை திருடிக் கொண்டு போவது யார் என்பதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு என்று அறிவித்தார்.

இந்த குரு ராஜாவிடம் போனார். சாதம்–கறி குழும்பு எல்லாம் சூடாக இருக்கின்ற மாதிரி சுடச்சுட வைத்திருந்தால் திருடனைக் கண்டு பிடித்து விடலாம் என்றார். குரு இப்படி சொல்லுகின்றாரே என்பதற்காக ராஜாவும் அதே போல் சாதம் குழம்பு எல்லாம் சூடாக ஆவி பறக்கிற அளவுக்கு இருக்கின்ற மாதிரி ஏற்பாடு செய்து விட்டார்.

இந்த சிஷ்யன் நெற்றியிலே பொட்டு வைத்துக் கொண்டு வழக்கம் போல் ராஜாவுடைய சாப்பாட்டை திருடப் போனான். பாத்திரத்திலே எல்லாம் சூடாக இருந்தது. ஆவி பறந்தது. இவன் அப்படியே நைசா அந்தப் பாத்திரத்தை தூக்கிக் கொண்டு மெதுவாக வந்தான். அந்த ஆவி இவன் நெற்றியிலே பட்டு அங்கிருந்த பொட்டு வியர் வையிலே கரைந்து போய் விட்டது. பொட்டு அழிந்திருந்ததை வைத்து திருடன் யார் என்பதை சுலபமாக கண்டு பிடித்து விட்டார் ராஜா! அதன்பின் சும்மா இருப்பாரா? உடனே என்னுடைய சாப்பாட்டை திருடின இவனை சிரச்சேதம் செய்யுங்க என்றார். தண்டனையை நிறைவேற்றுவதற்காக அவனை அழைத்துக் கொண்டு போறார்கள். அந்த சமயத்திலே குரு அங்கே வந்தார்.


அடேய் சிஷ்யா! இப்பயாவது நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால் என்று உண்மையை சொல்! உன்னை இந்த தண்டனையில் இருந்து காப்பாற்றுகின்றேன் என்றார். அப்பவும் அவன் நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் சுவாமி! என்று சாதித்து விட்டான்.

குரு அசந்து போய் விட்டார். சிஷ்யனுடைய திடசித்தம் அவரை ஆச்சரியப்பட வைத்தது. நேராக ராஜாவிடம் போய் இவனுக்காக சிபாரிசு செய்து சிஷ்யனுக்கு கொடுத்த தண்டனையை ரத்து செய்தார். அதன்பின் சிஷ்யனை அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்து உபதேசம் செய்ய ஆரம்பித்தாராம்.சொன்னது பொய்யாக இருந்தால் கூட அந்த பொய்யை காப்பாற்றுவதிலே எவ்வளவு உறுதியாக இருந்திருக்கின்றாய்.இன்னொரு சிஷ்யன் இருந்தான் அவன் சொன்னான் எனக்கும் ஒரு குரு இருக்கின்றார். நானும் கூட முயல் பிடித்தேன். காலை சுட்டு சாப்பிட்டு விட்டேன். இருந்தாலும் எனக்கும் குருவுக்கும் இடையே இது போல் விவகாரமே வராமல் பார்த்துக் கொண்டேன் என்றார்.

மிகவும் கெட்டிக்காரன் போல இருக்கு! அது எப்படி? என்று கேட்டேன். அந்த சிஷ்யன் ஒரு காலை தான் சாப்பிட்டு 3 காலை குருவிடம் கொடுத்ததனால் தானே விவகாரம் வந்தது? நான் அப்படி செய்யவில்லை. 4 காலையும் நானே சாப்பிட்டு விட்டேன். குருவிடம் போய் வேட்டையிலே ஒரு முயல் கிடைத்தது. அதற்கு 4 காலும் இல்லை என்று ஒரேயடியாக அடித்து விட்டேன் என்றார். அதை நம்புகின்ற அளவிற்கு உன் குரு முட்டாளா? என்று கேட்டேன். ஆமாம் அதனால் தான் அவர் எனக்குக் குருவாக இருக்கின் றார்! என்றான் அந்த சிஷ்யன் ரொம்ப சாவகாசமாக!

# ஜனாதிபதியின் எச்சரிக்கையை மீறி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடுகிறது

## பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி அறிவிப்பு



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த குண்டுத்தாக்குதல்கள் சம்பந்தமாக பாராளுமன்றத்திற்கு அறிக்கை இடுவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அடுத்த அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை திட்டமிட்டபடி நடைபெறும் என அக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.**

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட அமைச்சரவையில் பகிரங்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையிலேயே நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் அமர்வுகள் குறித்து கேள்வி எழுப்பியபோதே அதன் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதியின் கருத்துக்களை அவதானித்துள்ளோம். அவர் குறிப்பிட்ட வகையிலான தரப்பினர் அடுத்து நடைபெறவுள்ள அமர்வில் பங்கேற்கவில்லை. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே தெரிவுக்குழு உருவாக்கப்பட்டுள்ளமையையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் பிரதி பாநாயகர் ஆனந்த குமாரசிறி சுட்டிக்காட்டினார்.

தெரிவுக்குழுவின் குறித்த அமர்வில் மேல்மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் எம்.ஐ.எம் றிஸ்வி, கலீல் மௌலவி மற்றும் காத்தான்குடி பள்ளிவாசலைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களை முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பாதுகாப்புச் செயலாளர் எஸ்.எச்.சாந்த கோட்டேகொட, புலனாய்வுப் பிரிவுத் தலைவர் சிசிரமென்டிஸ், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் இதுவரையில் சாட்சியங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குற்றப்புலனாய்வுப் பிரதானி ரவி செனவிரட்ன, பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணை பணிப்பாளர் வருண ஜெயசுந்தர ஆகியோரையும் அடுத்து வருகின்ற அமர்வுகளில் வரவழைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

எவ்வாறாயினும் பாதுகாப்புத்துறை சார்ந்த அதிகாரிகளை விசாரணைக்கு முன்னிலையாவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளில் அதிகளவானோர் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அதனை இடைநிறுத்துவதென்பது பாராளுமன்றத்தின் மதிப்பையும், ஆட்சியாளர்களின் மீதான அதிருப்தியையும் தவிர்த்து தெரிவுக்குழுவின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு கருத்துக்களை முன்வைத்து வருவதாக தெரியவருகிறது. (இ-7)

## இலங்கையில் பேஸ்புக், வட்ஸ்அப், வைபர் பயன்படுத்துவோருக்கு புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் பேஸ்புக் உட்பட சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.


அதற்கான சட்டங்களில் திருத்தம் செய்வது தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான கண்காணிப்புக் குழு அவதானம் செலுத்தியுள்ளது.

கடந்த நாடாளுமன்ற அமர்வில் அந்தக் குழுவிற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார்.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய கருத்து மற்றும் காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பிரசாரம் செய்யப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளதாக குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)

## இந்தியப் பிரதமருக்கு புத்தர் சிலை அன்பளிப்பு



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சமாதி நிலை புத்தர் சிலை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

இந்தப் புத்தர் சிலை வெண்தேக்கு மரத்தில் கையால் செதுக்கப்பட்டதாகும். இதனைச் செதுக்க இரண்டு ஆண்டுகள் பிடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தியான முத்திரை என அழைக்கப்படும் யோக நிலையில் புத்தர் அமர்ந்திருக்கும் வகையில் இந்தச் சிலை செதுக்கப்பட்டது.

இதனை பெற்றுக்கொண்ட இந்தியப் பிரதமர் மோடி, இந்தப் புத்தர் சிலை, ஒரு சிறப்பு நண்பரிடம் இருந்து கிடைத்த சிறப்பு பரிசு என்று தெரிவித்தார். (இ-7)

## மிகவும் அபாயகரமான நிலைமையில் நாடு


### ஞானசார தேரர் அச்சம்

(கொழும்பு)

நாடு மிகவும் அபாயகரமான நிலைமையில் உள்ளதாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலோடு நாட்டில் ஏற்பட்ட நிலைமையை நீங்கள் எவ்வாறு காண்கின்றீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பீதியானது இன ஒற்றுமைக்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.




...னால் நாடு மிகவும் அபாயகரமான நிலைமையில் உள்ளது எ... தேரர் தெரிவித்தார். (இ-7)

## ஐ.நா, பாராளுமன்ற பிரேரணைகள் உதாசீனம்

# சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை

## அரசு மீது கூட்டமைப்பு அதிருப்தி





(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பயங்கரவாத ஒழிப்பு நிறைவேற்றுச் சபையின் அதிகாரியுமான மிஷேல் கோனின்சஸ் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் பிரேரணையின் அமுலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன் இந்தப் பிரேரணைகளின் கூட்டுப் பங்காளிகள் என்பதை மறந்தவர்களாக அரசாங்கம் செயற்படுகின்றது என்றும் பிரேரணைகளின் முன்மொழிவுகளை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

இந் நிலைமை தொடர்பில் நாங்கள் அதிருப்தியடைந்துள்ளோம் எனவும் இந்நிலைமை நாட்டிற்கு நல்லதல்ல. மிக விசேடமாக ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்நிலைமை தொடர்ந்தால் அபகீர்த்தி ஏற்படும் எனவும் தெரிவித்த இரா.சம்பந்தன் ஒரு அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை சற்றும் மதிக்காமல் செயற்படுமேயாகில் அத்தகைய நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்களின் உருவாக்கத்திற்கான அடிப்படை நோக்கங்களைக் கேள்விக் குறியாக்கும் செயற்பாடாகும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும் ஒரு புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்காக இலங்கை பாராளுமன்றத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இந்த அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதை சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இத்தகைய பிரேரணைகளுக்கெதிரான அரசாங்கத்தின் செயற்பாடானது நல்லிணக்க முயற்சிகளுக்கும் கடந்தகாலச் சம்பவங்கள் மீள் நிகழாமையை உறுதி செய்வதற்குமான பொறிமுறைகளில் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்தார்.

மனித உரிமைப் பேரவையின் பிரேரணையையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினையும் உதாசீனம் செய்யும் வகையில் செயற்படுகின்றமையானது இந்த அரசாங்கம் பிறிதொரு அட்டவணையில் முன் செல்லுகின்றமைக்கான எடுத்துக்காட்டாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தற்போது அமுலில் உள்ள கடுமையான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பின்னணியை விளக்கிய அதே வேளை இந்த சட்டத்தினை பிறிதொரு சட்டத்தால் மாற்றீடு செய்வது இந்த அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளில் பிரதானமான ஒன்றாகும் என்பதனையும் ஒரு வரைபு சட்டமூலம் இருக்கின்ற போதிலும் அது குறித்ததான முன்னெடுப்புக்கள் இன்னும் முற்றுப் பெறவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி அகிம்சைப் போராட்டங்களை நடத்திய போது தமிழ் மக்களிற்கெதிரான வன்முறைகள் 1950, 1970 மற்றும் 1980 களில் அரங்கேற்றப்பட்டன என்றும் இவை தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் என்றும் எடுத்துக் காட்டிய இரா.சம்பந்தன் சிங்கள தலைவர்களான பண்டாரநாயக்க மற்றும் டட்லி சேனநாயக்க ஆகியோர் தமிழ் மக்களின் தலைவரான செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் உருவாக்கத்திற்கு முன் இடம்பெற்றவை. ஆயினும் சிங்களத் தலைவர்கள் அந்த ஒப்பந்தங்களை மதித்து செயற்படவில்லை.

அவர்கள் அவ்வாறு மதித்து செயற்பட்டிருந்தால் இந்த நாட்டில் ஒரு யுத்தம் ஏற்பட்டிருக்காது என்பதனையும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சியாக கட்டமிடப்பட்ட வகையில் எமது உரிமைகளை மறுக்கும் செயலானது ஐக்கிய நாடுகளின் சமூக அரசியல் உரிமைகள் சாசனத்தை மீறும் செயலாகும் என்பதை தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் இன்று எமது விருப்பிற்கு மாறாக நாம் ஆளப்படுகின்றோம் என்றும் தெரிவித்தார். மேலும் மீண்டும் ஒரு யுத்தம் உருவாகுவதை நாம் அனுமதிக்க முடியாது.

யுத்தத்தினால் எமது மக்கள் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளார்கள் என்றும் தெரிவித்த இரா.சம்பந்தன் , சிங்கள மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை நாம் விரு ம்பவில்லை என்றும் ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த நாடு ஒரு சில சிங்கள பௌத்த பேரினவாதிகளால் இயக்கப்படுகின்றமையும் அத்தகைய சக்திகளுக்கு எதிராக சிங்களத் தலைவர்கள் செயற்படாமையும் வருந்தத்தக்க விடயமாகும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் இந்த நாட்டின் சட்டங்கள் இனங்களுக்கிடையே வித்தியாசமாக பிரயோகிக்கப்படுவதையும் விசேடமாக சட்ட அமுலாக்க நிறுவனங்கள் சிங்கள பௌத்த கடும் போக்காளர்களின் செயற்பாடுகளை திட்டமிட்ட முறையில் அனுமதிப்பதையும் எடுத்துக்காட்டினார்.

நாங்கள் பிரிவுபடாத, பிரிக்க முடியாத, ஒன்றிணைந்த இலங்கைத் தீவிற்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வினை எதிர்பார்க்கின்றோம். இந்தத் தீர்வை எமக்கு விரைவில் வழங்காத சந்தர்ப்பத்தில் எமது மக்கள் தமது நீண்டகால அரசியல் கோரிக்கைகள் தொடர்பில் மீள சிந்திக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்பதனையும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

மேலும் இலங்கை அரசாங்கமானது தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றமையை உறுதிசெய்யும் வகையில் சர்வதேச சமூகம் மிக உத்வேகத்துடனும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட வேண்டும் எனவும் இரா.சம்பந்தன் வேண்டிக் கொண்டார்.

தமது முன்மொழிவுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் கருத்துக்களிற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை உறுதி செய்த உதவிச் செயலாளர் நாயகம் ஐ.நாவின் ஆக்கபூர்வமான பங்களிப்பு தொடர்ந்தும் இருக்கும் என்பதனையும் உறுதி செய்தார். இச்சந்திப்பில் உதவிச் செயலாளர் நாயகத்துடன் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் சட்ட அதிகாரி அட்ரியா மற்றும் விசேட உதவியாளர் லைலா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

# ஆடைக் கட்டுப்பாட்டை செயற்படுத்த வேண்டாம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஆடைக் கட்டுப்பாடு குறித்த சுற்றுநிருபத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமையால், அதன் விதிமுறைகளைச் செயற்படுத்தத் தேவையில்லை என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.


இந்தச் சுற்றுநிருபத்தைத் திருத்துவதற்கான பணிகளை, ரஞ்சித் மத்தும பண்டார முன்னெடுத்து வருவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

அரசாங்க அலுவலகங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அரசாங்க அதிகாரிகளின் ஆடைகள் தொடர்பில், பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் கடந்த மாதம் 31 ஆம் திகதி சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது.

இந்தச் சுற்றுநிருபத்துக்கு பல எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (இ-7)

# பயணித்துக் கொண்டிருந்த பேருந்தின் படிக்கட்டு திடீரென உடைந்து விழுந்தது

## நடத்துநர், பயணி பலி



(கடுகண்ணாவ)

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மட்டக்குளி சாலைக்குச் சொந்தமான பேருந்தின் மிதிபலகை (படிக்கட்டு) கடுகண்ணாவை பகுதியில் திடீரென உடைந்து விழுந்ததில் பேருந்து நடத்துநரும் பயணி ஒருவரும் உயிரிழந்தனர்.

முன்பக்க மிதிபலகை உடைந்து வீழ்ந்ததில் அதில் நின்ற இருவரும் முன்சில்லில் சிக்கி உயிரிழந்தனர்.

குறித்த சம்பவத்திம் சம்மாந்துறையைச் சேர்ந்த சேகர் என்ற நடத்துநரே உயிரிழந்தவர். மற்றவரின் தகவல்கள் வெளியாகவில்லை.

இந்நிலையில் நடத்துநரின் சடலம் ஹேறநாவலை வைத்தியசாலையிலும் மற்றவரின் சடலம் மாவனல்லை வைத்தியசாலையிலும் வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிங்கப்பூரில் கோத்தாவுக்கு இருதய சத்திர சிகிச்சை



(சிங்கப்பூர்சிற்றி)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூரிலுள்ள மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

இருதயத்திற்கு குருதியை கொண்டு செல்லும் இரண்டு வால்வுகளில் அடைப்பு இருந்ததாகவும் சத்திர சிகிச்சையின் மூலம் அவை அகற்றப்பட வேண்டும் என வைத்தியர்கள் கூறியதாகவும் கோத்தபாயவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கமைய கோத்தபாயவுக்கு இந்த இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சத்திர சிகிச்சையின் பின்னர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டுள்ள, அவர் இரண்டு வாரம் ஓய்வெடுக்க வேண்டும் என வைத்தியர்கள் பரிந்துரைத்தனர்.

இதன் பின்னர், மூன்று மாத காலத்திற்கு சிறிய உடற்பயிற்சிகளை செய்ய வேண்டும் எனவும் வைத்தியர்கள் ஆலோசனைகளுக்கு அமைய கோத்தபாய ராஜபக்ஷ மீண்டும் இலங்கை திரும்புவார் எனவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)


கலாநிதி மு.குணசிங்கம்

269

20 பெரும்பான்மை வாக்குகளால் மேற்படி மசோதா பாராளுமன்றத்தில் 1948 டிசெம்பர் 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. மேற்படி விபரங்களிலிருந்து சில விடயங்களை அவதானிக்க முடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் குறிப்பாக டி.எஸ்.சேனநாயக்கவின் மேற்படி பிரஜாவுரிமை சம்பந்தமான மசோதாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் வாக்களித்தமை பற்றி இங்கு கருத்திற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

பெரும்பான்மையான ஆளுங் கட்சிப் பிரதிநிதிகள் இந்தியத் தமிழர் இலங்கையையிட்டு அவர்களின் தாய்நாடாகிய இந்தியாவுக்குச் செல்வதையே விரும்பியிருந்தனர். ஆனால் நான்கு அல்லது ஐந்து சந்ததிகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து வந்த தமிழ்ச் செட்டிகளின் பரம்பரையில் தோன்றி பின்னர் தமது கிறிஸ்தவப் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றி பௌத்த சிங்களத் தேசியவாதிகளாகத் தம்மைச் சிங்கள மக்களுக்குக் காட்டிக்கொண்ட எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தமது சகோதரர்களுக்கு எதிராக முழு மூச்சுடன் செயற்பட்டு அவர்களது பிரஜாவுரிமையைப் பறிப்பதில் தீவிரம் காட்டியமை குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.



ஹோவாட் ரிகின்ஸ் (Howard Wriggins)

### சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

யஸ்மின் குணரத்ன (Yasmine Gunaratne), கே.எம்.டி. சில்வா (K.M.DeSilva) ஹோவாட் ரிகின்ஸ் (Howard Wriggins) ஆகியோரும் இது சம்பந்தமான ஆய்வுகளை நடத்தியும் எழுதியும் உள்ளார்கள். இந்திரபாலா தனது நூலில் இது பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இடதுசாரிப் பிரதிநிதிகள் இயல்பாகவே தொழிலாளரின் நலன்களையும் உரிமைகளையும் பேணி மதித்து நடப்பவர்கள் என்ற ரீதியிலும் முன்பு குறிப்பிட்ட இடதுசாரிப் பிரதிநிதிகள் உயர்ந்த கல்விமான்களாக இருந்ததன் விளைவாகவும் அவர்கள் 150 வருடங்களுக்கு மேலாக இலங்கைக்காக உழைத்த இந்தியத் தமிழர்களை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடனும் அரசியல் கண்ணோட்டத்துடனும் பார்த்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

முஸ்லிம் பிரதிநிதிகள் இயல்பாகவே வியாபாரத்துறையில் இந்தியத் தமிழர் நமக்குப் போட்டியாக இருப்பதை என்றுமே விரும்பவில்லை. அதன் காரணமாகவும் அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெற வேண்டும் என்ற நோக்கிலும் மேற்படி விடயத்தில் அவர்கள் அரசுக்குச் சார்பாக இருந்துள்ளனர் எனக் கொள்வதிற் தவறில்லை.

ஆனால் தமிழரின் அதி முக்கியம் வாய்ந்த தலைவராகிய ஜி.ஜி.பொன்னம்பலம் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்குத் துணை போயிருக்கின்றாரே என்பது அரசியல் வரலாற்றாளருக்கு அதிகபட்ச அதிர்ச்சியையும் வெறுப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தவே செய்யும். இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறிக்கையில் அவர்கள் வாக்களிக்கும் உரிமையையும் இழக்க நேரிடும்.

அன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழரைவிட இந்தியத் தமிழர் எண்ணிக்கையில் அதிகமாக இருந்திருக்கின்றார்கள் என்பது பற்றி ஏற்கனவே புள்ளிவிபரங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் வாக்குரிமை இழக்கையில் அதன் விளைவாக சுமார் 50 வீதமான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தமிழர் ஒட்டுமொத்தமாக இழப்பார்கள் என்ற விடயம் மேலைத்தேய விஞ்ஞானக் கல்விபெற்ற ஒரு தலைசிறந்த குற்றவியல் வழக்கறிஞருக்குத் தெரியாமல் போயிருக்குமா? எனச் சகலரும் வியப்பதில் நியாயமுண்டு.

சிறுபான்மையினருக்கு ஐம்பதுக்கு ஐம்பது சமபிரதிநிதித்துவம் இலங்கைப் பாராளுமன்றத்தில் வேண்டுமென்று சுமார் 12 வருடங்களுக்கு மேலாகப் போராடி பிரித்தானியாவரை சென்று வாதாடிய ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அரசியல் நடவடிக்கையை வரலாற்று அரசியல் ஆய்வாளர் எங்ஙனம் மதிப்பிடுவார்கள் என்பதற்கான விடையை இன்றைய தமிழரின் நிலை காண்பித்து நிற்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கும் சிங்களப் பெரும்பான்மை அரசுக்குத் துணை போனதோடு மட்டுமல்லாமல் அம் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றும் பொருட்டு வாக்களிப்புக்கு விடப் பட்டபோது பொன்னம்பலம் அதற்குச் சாதகமாக வாக்களித்திருக்கிறார். அறிவியல்பூர்வமாக நோக்கினால் பொன்னம்பலத்தின் இச்செயல் அவருக்கு எதுவித அரசியல் தூரநோக்கோ அல்லது தேசப்பற்றோ இருந்திருக்கவில்லை என்பதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

சி.சுந்தரலிங்கத்தின் அரசியல் நிலைப்பாடு பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. சுமார் 3 மாதங்களுக்கு மேலாக விவாதிக்கப்பட்ட இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை தொடர்பான மசோதாவின்போது ஜி.ஜி. பொன்னம்பலம் எதுவிதக் கருத்தும் தெரிவிக்காது எவ்வாறு மௌனம் சாதித்தாரோ அதேபோன்று சுந்தரலிங்கமும் இந்த விடயத்தில் மௌனம் சாதித்தார்.

அரசின் அமைச்சராக அவர் இருந்தமையால் அவரால் இவ் விடயத்தில் அரசாங்கத்திற்கு எதிராக எதுவும் பேச முடியவில்லை என்றே கருத முடிகின்றது. ஆனால் சுந்தரலிங்கம் மேற்படி மசோதா பாராளுமன் றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இருக்கவில்லை என்பதும் அம்மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரே அவர் பாராளுமன்றத்தில் பிரசன்னமளித்தார் என்பதனையும் ஹன்சாட் மூலமாக அறிய முடிகிறது.

மேலும் எதிர்காலத்தில் அரசியல் வரலாற்று மாணவர் நிச்சயம் நடந்த உண்மைகளை உலகத்திற்குச் சொல்வார்கள் என்றும் இதனால் எதிர்காலச் சந்ததியினர் தங்கள் மேல் பழி சுமத்துவர் என்றும் இத்தனை தலைசிறந்த கல்விமானாலும் வழக்கறிஞராலும் ஏன் சிந்திக்க முடியாமல் போய் விட்டது?

(தொடரும்)

# மாலை நிகழ்வுக்கு காலையில் அழைத்து செல்லப்பட்ட மக்கள்

## நீண்ட நேரம் காத்திருப்பு



வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று மாலை இடம் பெறவிருந்த சமுர்த்தி நிவாரணப் பயனாளிகளுக்கு உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வு காலை 9.30மணியளவில் நிகழ்வுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டு வெளி பிரதேசங்களிலிருந்து பஸ்களில் அழைத்து வரப்பட்ட மக்கள் முழு நேரமாக காத்திருந்த சம்பவம் நேற்று இடம் இடம் பெற்றுள்ளது.

காலை 9.30 மணியளவில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டு படையினர் இணைந்து பாதுகாப்பினை வழங்கி வருகின்றனர். அழைப்பிதழில் பிற்பகல் 1.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மாலை 3.30 மணியளவில் நிகழ்வுகள் இடம். பெறவுள்ளதாக சமுர்த்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு நேரத்தை மாற்றிக் குறிப்பிட்டிருந்தமையால் நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

வெளிப்பிரதேசங்களிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்கள் நகரசபை மைதானத்தில் நீண்ட நேரம் காத்திருந்ததுடன் தாம் அலைக்களிக்கப்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்தனர்.(9)

# மக்கள் குடியிருப்புக்குள் தீ



கிளிநொச்சி நகரில் நீதி மன்றுக்கு பின்புறமாக மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் ஏற்பட்ட தீ கரைச்சி பிரதேச சபையினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.நேற்று நண்பகல் நீதிமன்றுக்கு பின்புறமாக சிறைச்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியில் சிறை கைதிகளை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்து. இதன் போது ஏற்கனவே வீழ்த்தப்பட்டு காய்ந்திருந்த ஆலமரத்திற்கு தீ வைக்கப்பட்ட போதே அது பெரியளவில் சுவாலை எரிந்தது. அத்தோடு மக்களின் குடியிருப்புகளில் உள்ள பயிர்களுக்கும் பரவியது.

இதனையடுத்து கரைச்சி பிரதேச சபையின் தீ அணைப்பு பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தீயைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

இருப்பினும் கரைச்சி பிரதேச சபையின் தீ அணைக்கும் செயற்பாடு அங்கிருந்த மக்களிடம் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆரம்பத்தில் தீ அணைக்கும் இயந்திரம் மட்டுமே குறித்த இடத்திற்கு வருகை தந்து தீ அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது நீர் தீர்ந்து விட்டது. இதனால் தீ அணைக்கும் பணி இடைநடுவில் முப்பது நிமிடங்களுக்கு மேல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் அறிவிக்கப்பட்டு நீர்த்தாங்கிகள் மூலம் நீர் கொண்டுவரப்பட்டு ஒரு மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இச் செயற்பாடு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

அத்தோடு தீ அணைக்கும் இயந்திரத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏறி நின்றுகொண்டு பயிற்றப்பட்ட தீ அணைக்கும் வீரர்களுக்கு இடையூறாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

எனவே இனியொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு நடந்து கொள்ளாது பயிற்றப்பட்டமைக்கு அமைவாக அவசர காலத்தில் தீ அணைக்கும் முறைகளுக்கு ஏற்றவகையில் செயற்பட வேண்டும் எனவும் பொது மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர். (9-312)

# வேணாவில் கிராமிய சுகாதார நிலையம் திறப்பு




(பனிக்கன்குளம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணத்தில் உருவான நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்கின்ற தேசிய வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு வேணாவில் கிராமிய சுகாதார நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உமாசங்கர்,புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கெங்காதீஸ்வரன், வைத்திய கலாநிதி சத்தியரூபன் மற்றும் தயானந்தரூபன், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் அமுதராஜ் மற்றும் வேணாவில் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதார பணிமனை, உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கட்டடத்தை மக்கள் பாவனைக்கு திறந்து கையளித்துள்ளனர். (9-281)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1744

### ஆரோகி

எங்க வீட்டுக்கு திருடன் வந்து நகை, பணம், டிவி எல்லாம் தூக்கிட்டுப் போயிட்டான்! நான் எவ்வளவு சொல்லியும் என் ஸ்கூல் பாக் எடுக்க மறந்திட்டான் பாவி...




### தர்சிகன்

நம்மள நேசிக்கிறவங்கள வெறுக்கிறதும் நம்மள வெறுக்கிறவங்கள நேசிக்கிறதும் தான் நாம் பண்ற பெரிய தப்பே



### தனு

திருமண வாழ்க்கை
யாரென்றே பழக்கமில்லாத ஒருவரிடத்தில் ஏற்பட்ட நம்பிக்கையின் பேரில் வாழ்வின் இறுதிவரை அவர்களைக் கொண்டு செல்லும் அழகான பயணம்



### பிரேம்

ஆசிரியர்: உப்பு சைவமா, அசைவமா?
மாணவன்: ரசத்தில போட்டா சைவம், கறிக்குழம்பில போட்டா அசைவம் சேர்



### விஷ்னு

இந்தப் பெண்கள் மணிக்கணக்கில் சமையல் நிகழ்ச்சிகளைப் பார்த்திட்டு ஆண்களைப் பார்த்து மனச்சாட்சியே இல்லாம ஒரு கேள்வி கேப்பாங்க பாருங்க இன்னைக்கு என்ன சமைக்கட்டும்



### வாமணன்

வாழ்க்கை ஒரு டீயில முக்கின பிஸ்கட் மாதிரி எதுக்கும் தாமதிக்கக்கூடாது... அப்புறம் நட்டம் நமக்குத்தான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போட்டி போட்டுச் சென்றதில் 19 பேர் படுகாயம்

## சாரதிகள் கைது; நடத்துநர் மீது பயணிகள் தாக்குதல்

(அக்குரஸ்ஸ)

அக்குரஸ்ஸ - தெனியாய பிரதான வீதியின் ஹுலந்தவ பகுதியில், பேருந்து ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில், 19 பேர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தெனியாயவிலிருந்து அக்குரஸ்ஸ நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் தவலம பகுதியிலிருந்து அக்குரஸ்ஸ பகுதிக்குச் சென்ற பேருந்து ஒன்றும் போட்டி போட்டு சென்ற போதே, இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.



தவலம பகுதியிலிருந்து வந்த பேருந்து மற்றைய பேருந்துடன் மோதியதையடுத்து, தெனியாயவிலிருந்து வந்த பேருந்து வீதியை விட்டு விலகி, பள்ளமொன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், பயணிகளின் தாக்குதலுக்குள்ளான பேருந்து நடத்துநர், படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-7)

# சிறுபான்மை மக்களுக்கு எதிராக வாய் பிளந்து இரத்தம் குடித்த சிங்கள பௌத்த பேரினவாதம்

## முஸ்லிம்கள் மீது இப்போது முழுமையாக பாய்ச்சல்

சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் கடந்த எழுபது ஆண்டுகளில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கும், மலையகத் தமிழ் மக்களுக்கும் அவ்வப்போது முஸ்லிம் மக்களுக்கும் எதிராக வாய் பிளந்து இரத்தம் குடித்து வந்த சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள், இப்போது முஸ்லிம் மக்கள்மீது முழுமையாகப் பாய்ந்துகொண்டு நிற்கின்றன. இத்தகைய முஸ்லிம் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட அச்சுறுத்தல்களை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என அக்கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் 21 ஈஸ்ரர் தின குண்டுவெடிப்புக்களுக்குப் பின்னர் கட்டவிழ்த்து விடப்பட்ட பேரினவாத வன்முறைகள், சொத்து அழிவுகள் அனைத்து முஸ்லிம் மக்களையும் கடுமையாகப் பாதித்து வருகின்றன. அத்துடன் சந்தேகத்தின்பேரில் சுமார் இரண்டாயிரத்து முன்னூறு வரையான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வயது வேறுபாடின்றிக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் அநேகர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இனவாத ஊடகங்களும் சமூகவலைத்தளங்களும் மிக மோசமான முஸ்லிம் விரோதப் பரப்புரைகளை முன்னெடுத்தும் வருகின்றன. கடந்த காலத்தில் அரசாங்க சுற்றுநிருபத்தின் மூலம் அரச பணிகளில் ஈடுபடும் ஆண்கள் நீளக் காற்சட்டையுடன் சேட் அல்லது தேசிய உடை அணியவேண்டும் எனவும் பெண்கள் சேலை மாத்திரமே அணியமுடியும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இதன்மூலம் முஸ்லிம் பெண்களின் பாரம்பரிய உடையான ஹபாயா எனப்படும் முழு நீள ஆடை நிராகரிக்கப்பட்டது. பின்பு இச் சுற்றுநிருபம் பல்வேறு தரப்பினரினதும் எதிர்ப்புகளால் இரத்துச் செய்யப்பட்டாலும் இச் செயற்பாட்டின் மூலம் முஸ்லிம் விரோதப் போக்கும் ஆணாதிக்க சிந்தனையும் வெளிப்பட்டு நின்றது கண்கூடு. அதேபோன்று முஸ்லிம் விரோதத்தை சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லும் பேரினவாத நோக்குடனேயே அண்மையில் கண்டியில் முன்னெடுக்கப்பட்ட பௌத்த துறவியும், பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரரின் மூன்று நாட்கள் இடம்பெற்ற உண்ணாவிரதம் அமைந்திருந்தது.

இதில் அண்மையில் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட இன்னொரு பௌத்த துறவியான ஞானசார தேரரின் வன்முறைப் பிரசாரமும் பரவலாக இடம்பெற்று வருவது கவனிக்கத்தக்கது. இவர்களால் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் முஸ்லிம் மக்கள் பயப்பீதியுடனும் பதற்றத்துடனும் தமது அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய துன்ப நிலை தொடர்கின்றது.

இத்தகைய முஸ்லிம் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட அச்சுறுத்தல்களை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் இவ் அவல நிலைக்குக் காரணமான இஸ்லாமிய மத அடிப்படைவாத சக்திகளின் வன்முறைகளையும் கண்டித்து நிற்கின்றது.

சிங்கள பௌத்த மத அடிப்படைவாத சக்திகள் இப்போது வெறித்தனமாக முஸ்லிம் மக்கள் மீது அபாண்டங்களையும் அச்சுறுத்தல்களையும் சுமத்தி மக்கள் மத்தியில் இன, மத அடிப்படையிலான வன்முறைகளுக்குத் தூபமிட்டு வருவதையும் எமது கட்சி கண்டிக்கின்றது. நாட்டின் பிரதான முரண்பாடாக இருந்து வரும் தேசிய இனப் பிரச்சினையின் உள்ளடக்கமான வடக்குக் கிழக்குத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் ஆகிய சிறுபான்மைத் தேசிய இனங்களின் தனித்துவங்களும் பண்பாட்டு அடையாளங்களும் அங்கீகரிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் நியாயமான அரசியல் தீர்வு காணப்பட்டிருப்பின் இன்றைய அவல நிலை தோன்றியிருக்காது.

கடந்த முப்பது வருட கால யுத்தத்தில் இரத்த ஆறு ஓட வைத்த அதே சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்க தரகு முதலாளித்துவ சக்திகளே இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராக மற்றுமொரு இன, மத அடிப்படையிலான மோதலுக்கு வழி ஏற்படுத்தி வருகின்றன. மத அடிப்படைவாத சிந்தனை நான்கு மதங்களுக்குள்ளும் இருந்து வருவது வெளிப்படை. இதில் ஒன்றை எதிர்த்து, ஏனையவற்றை நியாயப்படுத்த யார் முற்பட்டாலும், அத்தகையோர் மக்களுக்கு விரோதமானோரேயாவர். முஸ்லிம் மக்கள் தனியே மத அடையாளத்திற்கு மட்டும் உரியவர்கள் இல்லை.

அவர்கள் நாட்டின் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களில் ஒரு பகுதியினர் ஆவர். அவர்கள் அநேகர் இந்நாட்டையும் ஏனைய இன, மத மக்களையும் நேசிப்போராகவும் முற்போக்கு ஜனநாயக சிந்தனை உடையோராகவும் இருந்து வருகின்றனர்.

மத்திய கிழக்கின் பல நாடுகளிலும் அந்நிய ஏகாதிபத்திய தலையீடுகளுக்கும் பிற்போக்கான ஆட்சி அதிகாரங்களுக்கும் எதிராக மக்கள் போராடி வருகின்றனர். குறிப்பாகச் சிரியாவின் குர்திஸ்தான் பிராந்தியத்தில் இடதுசாரி மாக்சிச லெனினிசக் கட்சியைச் சேர்ந்த போராளிகள் ஏனைய தரப்புக்களுடன் இணைந்து போராடியே ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளைத் தோற்கடித்து தமது பிராந்தியத்தையும் மக்களையும் பாதுகாத்தனர். குர்திஸ்தான் போராளிகளும் முஸ்லிம்களே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிமிக்க சூழலில் நாட்டின் அரசியல் பற்றியும் பேரினவாதக் கட்சிகள் பற்றியும் முஸ்லிம் மக்களுக்கான மாற்று அரசியல் மார்க்கம் பற்றியும் முஸ்லிம் மக்கள் தூரநோக்குடன் சிந்திப்பது அவசியம்.

அடையாள அரசியலுக்கு அப்பால் முஸ்லிம் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை உணர்ந்து, அவர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் வென்றெடுப்பதற்குப் பொருத்தமான அரசியல் மார்க்கம் எது என்ற ஆய்வை மேற்கொள்வது இன்றைய இளம் தலைமுறையின் அவசியமானதொரு கடமையாகவுள்ளது.

இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளோடு இணைந்து முன்செல்லக்கூடிய மாற்று அரசியல் நிலைப்பாடு முஸ்லிம் மக்களுக்கு அவசியமானதொன்று என்பதை எமது கட்சி இவ்வேளை சுட்டிக்காட்டுகின்றது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## யானை தாக்கி ஒருவர் பலி!

### தூங்கிக் கொண்டிருந்தபோது விபரீதம்

(அலவாகும்பர)

திம்புலாகல, அலவாகும்புர கிராமத்தில் யானை மிதித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அலவாகும்புர பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபர் ஒருவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

தனது உறவினர் ஒருவர் வீட்டிற்கு சென்றிருந்த குறித்த நபர் அதிக வெப்பம் காரணமாக வீட்டு வாசலில் தூங்கிக் கொண்டிருந்த போது யானை அவரது தலையை மிதித்துக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### 3 மாணவர்கள் உயிரிழப்பு

## விபத்தை ஏற்படுத்திய சாரதி விளக்கமறியலில்

(கெக்கிராவ)

மூன்று மாணவர்களின் உயிரைப் பறித்த கெக்கிராவை விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட சாரதி எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கெக்கிராவை நீதவான் நிலந்த விமலரத்ன முன்னிலையில் அவர் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எஹலியகொடையிலிருந்து அநுராதபுரம் நோக்கி மரக்குற்றிகளை ஏற்றிக் சென்ற கப் ரக வாகனமொன்று, மேலதிக வகுப்பிற்கு செல்வதற்காக வீதியின் அருகில் நின்று கொண்டிருந்த நான்கு மாணவர்கள் மீது மோதியது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரி-56 ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(நீர்கொழும்பு)

ஜா-எல பகுதியில் ரி- 56 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஜா-எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏக்கல பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஜெயவர்த்தனபுர பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே, குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 400 |
| தக்காளி | 100 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 100 |
| கோவா | 100 | 80 | 120 |
| கரட் | 220 | 120 | 200 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 170 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 60 |
| பயற்றங்காய் | 100 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 100 | 70 | 120 |
| கறிமிளகாய் | 160 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 200 |
| போஞ்சி | 260 | 220 | 240 |
| கத்தரித்தம்பட்டா | — | 60 | 80 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 20-30 | 20-40 |
| இராசவள்ளி | 160 | 130 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 180 | 240 |
| முள்ளங்கி | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | 120 | 100 |




# கோயில்



இருநூறு வருடங்களுக்கு முன் மதுரை மாவட்டம் காட்டுப் புத்தூர் குளம். அது ஒரு சிறிய கிராமம். அந்த கிராமத்தை தள்ளி, ஊருக்கு வெளியே இரண்டு கிலோ தூரத்தில் ஒரு ராமர் கோயில் சந்நிதி. மிக சாந்த சொரூபியாக , பத்து அடி ராமன் சிலை மண்ணால் ஆனது. அதனால், ராமருக்கு திருமஞ்சனம் எண்ணும் நீராபிஷேகம் கிடையாது. வெறும் பூ அலங்காரம் மட்டுமே. ராமன் அருளால், ஊர் செழித்து இருக்கிறது. சக்தி வாய்ந்த இறைவன் என ஊர் மக்கள் பூரணமாக நம்பியதால் பூஜை புனஸ்காரம் எல்லாம் நல்லபடி நடந்தது. வறண்ட குளம், வறண்ட ஏரி என்றில்லாமால், மழையும் குறைவில்லாமல் பொழிந்தது. ஊர் சுபீட்சமாக இருந்தது..

இப்போது : நிகழ்காலம்

காட்டுப் புத்தூர் குள ஊருக்கு, மூன்று கிலோமீற்றர் தொலைவில், கட்டிக்கொண்டிருக்கும் பிரமாண்டமான அரசு வைத்தியசாலைக்காக, ராமர் கோயில் இருந்த இடத்தில், அரசு குடியிருப்பு வரப்போகிறாதாம். அரசு ஆணை. அதனால், கோயிலை இடித்தே ஆகவேண்டும். அதனால், கோயில் இருந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி, அதற்கு பதிலாக, ஊருக்குள்ளேயே, ஒரு நல்ல இடத்தை, அரசே கோயிலுக்கு கொடுத்து விட்டது. பேரூராட்சி செலவில், கோயிலும் கட்டிக் கொடுத்து விட்டது. ராமன் சிலையை பெயர்த்து , புதுக் கோயிலில் அமர்த்த வேண்டும். அது மட்டுமே பாக்கி. ஊர் மக்கள் மிக்க ஆவலுடன், அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தனர். ராமனை தங்கள் ஊரிலேயே வைத்துக் கொண்டாடலாம் தினமும் இனி.

ராமனை புதுக் கோயிலுக்கு குடிபெயர்க்க நாள் குறித்தாகி விட்டது. மாலை ஆறு மணிக்கு புறப்பட்டு, இரவு எட்டு மணிக்குள், புதுக்கோயிலில் இறக்கி விட்டு, அடுத்த நாள், காலை, பிரதிஷ்டை செய்வது என முடிவு.

அந்த நாளும் வந்து விட்டது. மாலை மணி ஆறு முப்பது. பக்தர்கள், பத்து அடி மண் ராமரை பத்திரமாக பெயர்த்து, பெரிய வண்டியில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்து கொண்டிருந்தனர். ஊர் மக்கள், பக்கத்து ஊர் மக்கள் என ஆயிரம் பேருக்கு மேல் கூட்டம் திரண்டு விட்டது. வாண வேடிக்கை, மேள தாளம், மக்களின் உற்சாகத்திற்கு கேட்கவே வேண்டாம் "ராம! ராம! ஹரே! ஹரே!" என்னும் ராம கோஷம் விண்ணைப் பிளந்தது.

பாதி வழி வருகையில் மழை பொழியத் தொடங்கியது. பாதிக் கூட்டம், கலைந்தது. ஆனால், மீதி ஊர் மக்கள், இன்னும் உற்சாகத்துடன் • "ஜெய ஜெய ராம்" என்று கோஷமிட்டுக் கொண்டே, ராமன் அனுமன் பின்னால் நடந்தனர்.

இன்னும் கொஞ்ச தூரம் செல்கையில், மழை வலுத்தது. இடி இடித்தது. வானம் பொத்துக் கொண்டது போல கொஞ்சம் கொஞ்சமாக, மக்கள், ஊர்வலத்திலிருந்து ஒதுங்க தொடங்கினர். ஆயிரம் பேரில் ஆரம்பித்த கூட்டம், இப்போது ஐம்பதாக குறைந்தனர்.

இன்னும் பலத்த இடி , மின்னலுடன் மழை! ஐம்பது ஐந்தானது. ராமனை தள்ளிக் கொண்டும் வந்தவர், ஒரு ஓரமாக வண்டியை நிறுத்தி வைத்து விட்டு, மழை விடும் வரை கொஞ்சம் தள்ளி காத்து நின்றிருந்தனர். ஆனால், கோயில் குருக்கள், அவர் ராமனை விட்டு ஒதுங்க முடியுமா? அவர் ராமனை ஒட்டியே நின்று கொண்டிருந்தார். சுற்றி இருள். திடீரென, ஒரு மின்னல். சட்டென்று, குருக்கள் முன் நின்றிருந்த ராமனின் பின் தலை முடிக்கு கீழே பளீரென்று ஒளி விட்டது போல தோன்றியது. குருக்களால் நம்ப முடியவில்லை. பிரமை என்று விட்டு விட்டார். சிறிது நேரம் கழித்து, மீண்டும் ஒரு மின்னல். இப்போது ஊன்றி பார்த்தார். நம்பவே முடியவில்லை. இப்போது, ராமனின் அதே இடம் மீண்டும் பளிச்சிட்டது போல தோன்றியது. இது என்ன சமத்காரம் ! இது என்ன மாயை? ராமனின் லீலா விநோதம்? தன் பிரமையை யாரிடமும் சொல்லவில்லை. யாரிடமாவது சொல்லலாமா? இது உண்மையில் பிரமையாக இருந்தால்? கோயிலுக்கு போய் பார்த்துக் கொள்ளலாம்.

அரை மணி நேர அடை மழைக்குப் பிறகு, மழை ஒருமாதிரி ஓய்ந்தது. மீண்டும், ஊர்வலம், ராமர் சிலையுடன், ஒரு சில பக்தர்கள் சூழ புதுக் கோயிலுக்கு வந்து ராமனை அரை குறை இருட்டில், (மழையினால் மின் வெட்டு) பீடத்தில் ஏற்றி விட்டு, அவரவர் தங்கள் மற்ற வேலைகளை பார்க்க சென்று விட்டனர். நாளை காலை, ராமனின் பிரதிஷ்டை மற்றும் மற்ற பூஜைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே? குருக்கள் மட்டும் கோயிலிலேயே அமர்ந்து விட்டார். அவரது மனதில் ஒரே எண்ணம் தான். இறைவன் தலை இருளில் பளிச்சிட காரணம் என்ன? சென்று பார்த்து விடலாமா? ராமன் சிலை அருகில் சென்றார். கை விளக்கை எடுத்து, ராமன் சிலை கழுத்தின் பின் புறம் தேடினார். ஒரு இடத்தில், பளிச் என்று தெரிந்தது. கையால் அங்கே சுரண்டினார். பளிச் இன்னும் கொஞ்சம் பெரிதானானது. இன்னும் சுரண்ட சுரண்ட, மண் உதிர்ந்து, அங்கே தங்கம் மஞ்சள் நிறத்தில் பிரகாசித்தது. வேகமாக சுரண்ட, கழுத்து, மார்பு பகுதிகளில் தங்கம் மெதுவாக எட்டிப் பார்த்தது. குருக்களுக்கு புரிந்து விட்டது. பத்து அடி ராமன் சிலை தங்கத்தால் ஆனது. திருடர் பயம் காரணமாக, எதிரி நாட்டு கொள்ளையர்களிடமிருந்து ராமனை காக்க, மிகுந்த வருடங்களுக்கு முன்பு, தங்க விக்கிரகத்திற்கு, மண் பூசி, வைத்து இருக்கின்றனர். மழை காரணமாக, இன்று, மண் விலகி, உள்ளே இருந்த தங்கம் வெளிப்பட்டது.

(நன்றி: பென் பிரபு அவர்களின் தியானம் பற்றிய ஹிந்தி உரையிலிருந்து)

கதையை சொல்லி முடித்தான் என் நண்பன் விஷ்வா. சிரித்துக் கொண்டே என்னைக் கேட்டான் " இப்போ சொல்லு! ஏன் இதுவரையில் யார் கண்ணுக்கும் தெரியாத தங்கம் இப்போ, தெரிந்தது?"

எனக்கு தெரிந்ததை நான் செய்தேன்! விழித்தேன். அது தான் எனக்கு கை வந்த கலையாயிற்றே! "தெரியலையே?"

நண்பன் சொன்னான் "ஏன்னா, சுந்தர், இதுவரைக்கும் மக்கள் இறைவனை வெளியிலே தேடிக் கொண்டிருந்தாங்க! மண்ணு தான் தெரிந்தது! இப்போ உள்ளே தேடினார் குருக்கள்! தங்கம் தெரிந்தது. எங்கே இருக்கோ, அங்கே தேடினார், கிடைத்தது! இப்போ தெரிஞ்சுக்கோ, இறைவனை, அது ராமனோ, சிவனோ, ஏசுவோ, இல்லே அல்லாவோ, வெளிலே தேடாதே, கோயில்லே தேடாதே, உன் மனசிலே தேடு! உண்மையாக தேடு! அவரை பார்க்கலாம்! அவர் கிடைப்பார்.! இறைவன் மந்திர்லே(கோயில்லே) இருக்காரோ இல்லேயோ, நிச்சயமாக நம்ம மன் கே அந்தர் (மனத்தின் உள்ளே) இருக்கார். கோயில்னா, கோ (இறைவன்) இல்லுன்னா, உள்ளே! இறைவன் உள்ளே இருக்கிறான் (மனதின் உள்ளே) என்று கூட அர்த்தம் கொள்ளலாம்."

எனக்கு ஏதோ புரிந்தது போல இருந்தது. ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்! "சரி, ஏன் இப்படி நம்ம கண்ணுக்கு தெரியாம மறைந்சுக்கணும்? அதுவும் மனசுக்குள்ளே? சரிப்பட்டு வரலையே விஷ்வா?"

விஷ்வா சிரித்தான். "நீ கேக்கிறது ரொம்ப சரி. முன்னே, இறைவன் எல்லார் நடுவிலேயும் தான் இருந்தார். ஆனால், யுகம் மாற, யுகம் மாற, மனிதர்களின் குணங்களும் மாற ஆரம்பித்து விட்டது. மண், பெண், பொன் இதிலே ஆசை. இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்கிற பேராசை, அதனால், பொறாமை, குரோதம், வருத்தம். இறைவனை "எனக்கு இன்னும் கொடு, இன்னும் கொடு" அப்படின்னு நச்சரிக்க ஆரம்பிச்சாங்க. பார்த்தார் இறைவன், இந்த கேடு கெட்ட மாந்தர்கள் கிட்டேருந்து எங்க தப்பிக்கலாம்? பேசாம, இமய மலைலே போய் ஒளிஞ்சிக் கிடலாமா? அவரது நண்பர் சொன்னார் "அது முடியாது கடவுளே! இன்னிக்கு, மக்கள், எவரெஸ்ட், கஞ்சன்ஜூங் எல்லா இடத்துக்கும் ஹெலிகொப்டர்லே வருவாங்க! உன்னை தொல்லைப்படுத்துவாங்க !

இறைவன் யோசிச்சார் "அப்படின்னா, கடலுக்கு அடியிலே போய் ஒளிஞ்சிக்கிடலாமா?. நண்பர் சிரித்தார் ! "இப்போ, புதுசு புதுசா கடலுக்கு அடியில் போற கப்பல் மூலமா அங்கேயும் வந்து உன்னை அரிப்பாங்க! அப்ப என்ன பண்ணுவீங்க?"

ஓஹோ! அப்படின்னா சரி, குகைக்குள்ளே போய் ஒழிஞ்சிக்கிறேன்!" நண்பர் சிரித்தார் "அதுவும் முடியாதே ! இப்போ ஜனங்க போகாத இடமே இல்லே!" இறைவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த மதி கெட்ட மாந்தர்களை தவிர்க்க என்ன வழி?

அதுக்கு அவர் பிரெண்ட் சொன்னார் "இறைவா! பேசாம மனுஷங்க மனசுக்குள்ளே போய் உக்காந்துக்கோ! ஜனங்க சந்தோஷத்தையும் நிம்மதியையும் உன்னையும் வெளியிலே தான் தேடுறாங்களே தவிர, தங்களுக்குள்ளே தேடுறதில்லை. அது தான் உனக்கு ஒளிந்து கொள்ள சரியான இடம்" இறைவனுக்கும் அதுதான் சரியான இடமாக பட்டது. பட்டென்று, மனிதனின் மனதிற்குள் மறைந்து விட்டார்.

இப்போ தெரிஞ்சுதா சுந்தர், ஏன் இறைவனை மனதுக்குள்ளே தேடனும் என்று?" விஷ்வா முறுவலித்தான் .

எனக்கு ஏதோ புரிந்தது போல இருந்தது. சின்ன பசங்ககிட்டேயிருந்து மிட்டாயை மறைக்கனும்னா, அவங்க புத்தக அலமாரியில், பாட புத்தகத்துக்கு நடுவில் மறைச்சு வெக்கிறா மாதிரி! அங்கே தானே தேட மாட்டாங்க! உண்மையில், இறைவன் நமது மனதில் தான் குடியிருக்கிறான்.

அவனை வெளியே தேடும் நாம், ஏன் நமக்கு உள்ளே தேட மறுக்கிறோம் ?

அவனை நமக்கு உள்ளே மீண்டும் தேடுவோம், தியானத்தின் மூலமாக, அவன் கிடைக்கும் வரை! (நன்றி: பென் பிரபு அவர்களின் தியானம் பற்றிய ஹிந்தி உரையிலிருந்து)

## விடுகதைகளும் விடைகளும்

• விறகெரியத் துணையாகும், விளக்கெரியப் பகையாகும். அது என்ன?

காற்று

• நம்மைப்போல் இருக்கும், நாம் இறந்தாலும் இறக்காது. அது என்ன?

புகைப்படம்

• தலையில் வைக்க முடியாத பூ, சமையலுக்கு உதவும் பூ. அது என்ன?

வாழைப்பூ

---

ஒருவர் தேர்வு எழுதச் சென்றார்.

கேள்விகள் அனைத்தும் அ அல்லது ஆ என்று இருந்தது. அனைத்துக் கேள்விகளுக்கும் ஒரு ரூபாய் நாணயத்தை சுண்டிப் போட்டு பூ வந்தால் அ என்றும், தலை வந்தால் ஆ என்றும் பதிலளித்தார்.

தேர்வு முடியும் நேரத்தில் மிகுந்த சோகமாக இருந்தார் அவர். அவரிடம் ஆசிரியர் கேட்டதற்கு, விடைகளை மீண்டும் சரிபார்க்கலாம் என்று நினைத்தால் அந்த நாணயத்தைக் காணவில்லை என்றார்.

---

## பொது அறிவுத்துணுக்குகள்

• ஒரு மைக்ரான் என்பது, ஒரு மீற்றர் அளவை பத்து இலட்சமாகப் பிரித்தபின் கிடைக்கும் ஒரு பகுதியாகும்.

• 1976 - அப்பிள் கணனி தொடங்கப்பட்டது.

• 1979 - 98 சதவீத மக்கள் ஆதரவுடன் இஸ்லாமியக் குடியரசாகியது. ஈரான்.

• பறக்கத் தெரியாத பறவை, பெங்குயின்.

• கார் உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடு, ஜப்பான்.

நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப்படாதே. நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.
- ஹிட்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீதியரசர் விக்னேஸ்வரன் பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டும்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றைய தினம் கொழும்புக்கு வருகை தந்திருந்தார்.

இரண்டாவது தடவையாகப் பதவியைப் பொறுப்பேற்ற பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அதிரடியாக வந்து சென்றமைக்குள் இந்திய வல்லாதிக்கம் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கியிருக்கலாம்.

தவிர, ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதம் இலங்கையில் தாக்குதல் நடத்தியிருந்த நிலையிலும் அதுபற்றி அச்சம் கொள்ளாமல் அண்டை நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பில் இந்தியா விழிப்பாக இருக்கிறது என்பதை நிரூபிப்பதாகவும் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் அமைந்திருக்கலாம். இவை ஒரு சிறுபார்வை மட்டுமே.

கொழும்புக்கு வருகை தந்த பிரதமர் மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதமர் மோடி எட்டு நிமிடங்கள் மட்டுமே சந்தித்தார்.

எட்டு நிமிடங்களில் சந்திப்பு முடிவடைந்தென்றால், அந்தச் சந்திப்பு எப்படியாக இருந்திருக்கும் என்பதை நாம் கூறி நீங்கள் யாரும் தெரிந்து கொள்ள வேண்டியிராது.

அதாவது முக்கியஸ்தர் ஒருவர் தனது காரில் ஏறிப் புறப்படுவதற்குள் நடந்தபடி சிலருடன் கதைப்பது வழக்கமல்லவா. அதுபோன்ற நிகழ்வுக்கு நிகராகவே இச்சந்திப்பும் இருந்திருக்கும்.

இலங்கை என்றால் அதன் முக்கிய விடயம் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவே இருக்கும்.

அதேநேரம் இந்தியா என்றதும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா தலையிட வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ் மக்களிடம் உள்ளது.

தவிர, இந்தியாவை நம்புங்கள். உங்களை நாங்கள் கைவிட மாட்டோம் என்று முன்னொரு தடவை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரதமர் நரேந்திர மோடி கூறியிருந்தார்.

நிலைமை இதுவாக இருக்கையில், பிரதமர் மோடியுடனான சந்திப்பு எட்டு நிமிடத்தில் முடிந்ததென்றால் தி.மு.க தலைவர் ஸ்டாலினை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சந்தித்தமை அட்டமத்தானாக முடிந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றும்.

இந்தியாவுக்கு வாருங்கள் இனப்பிரச்சினை பற்றிப் பேசலாம் என்று கூறி பிரதமர் மோடி கூட்டமைப்புடனான சந்திப்பை முடித்துக் கொண்டமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பைத் தட்டிக்கழிக்கின்ற காரியம் என்பதை எவரும் உணர்ந்து கொள்வர்.

எனவே எதிர்காலத்தில் கூட்டமைப்பினர் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திப்பதோ அன்றி கூட்டமைப்பினருடன் பிரதமர் மோடி பேச்சு நடத்துவதோ சாத்தியப்படப் போவதில்லை என்பது உறுதியாயிற்று.

ஆகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இந்தியாவுக்குச் செல்ல வேண்டும்.

இதற்கான ஏற்பாடுகளை அவசரமாக மேற்கொள்வது தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக இருப்பதுடன் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் பேச்சு நடத்த பிரதமர் மோடியும் விருப்பம் கொள்வார் என்பதும் உறுதியானது.

# சஹ்ரான் பயங்கரவாதக்குழு தொடர்பான உளவுத்தகவல் வழங்கியவர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

சஹ்ரான் உள்ளிட்ட பயங்கரவாதக் குழு தொடர்பில் உளவுத் தகவல் வழங்கிய நான்கு பேர், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.

தகவல் வழங்கிய முஸ்லிம் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவுக் குழுவின் உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு நாளை 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடவுள்ளது.

இதன்போது, உளவுத் தகவல்களை வழங்கியவர்களிடம் சாட்சிப் பதிவுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எந்தக் காலப்பகுதியில் தகவல்கள் வழங்கப்பட்டன, அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பன குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளதாக நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார். (இ-7)

# மட்டக்களப்பில் இனந்தெரியாதோரின் 37 அடையாள அட்டைகள் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு தலைமையக தபாற்கந்தோர் தபாற்பெட்டியில் இனந்தெரியாதோரால் ஒரே தடவையில் போடப்பட்டிருந்த 37 தேசிய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டன.

குறித்த தேசிய அடையாள அட்டைகளை தபால் அதிபர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம். டி.தீர்கா வத்துர தெரிவித்தார்.

குறித்த தபாற்கந்தோரில் உள்ள தபாற்பெட்டியை கடந்த வெள்ளிக்கிழமை காலை வழமைபோல திறந்து கடிதங்களை எடுக்கும்போது அதில் பல தேசிய அடையாள அட்டைகள் இருப்பதை ஊழியர் அவதானித்தார். அதன்பின்னர், இந்த விடயத்தை தபால் அதிபர் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து குறித்த தேசிய அடையாள அட்டைகளை பொலிஸ் நிலையத்தில் தபால் அதிபர் ஒப்படைத்தார்.

மட்டக்களப்பு(13), வவுணதீவு(6), களுவாஞ்சிக்குடி(2), கேகாலை (1), நாவலப்பிட்டி(1), காத்தான்குடி(8), கொக்கட்டிச்சோலை(1), களுத்துறை(1), மொனராகலை(1), திருகோணமலை(1), ஏறாவூர்(1) ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களது தேசிய அடையாள அட்டைகளே இவ்வாறு மீட்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## கணவனை இரும்பால் தாக்கி கொலைசெய்த மனைவி சரண்

(வட்டவளை )

வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டவளை பகுதியில் கணவனை இரும்பால் தாக்கி கொலை செய்த மனைவியை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் மது போதையில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கணவனை அதிகாலை ஒரு மணியளவில் இரும்பால் தாக்கி அவரது மனைவி கொலை செய்தார்.

இக்கொலையைச் செய்த பின்னர் அவரது மனைவி வட்டவளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்

3பிள்ளைகளின் தந்தையானஆ.ஜெயராமன்(வயது44) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## சட்டங்களை மீறிய 6 வர்த்தகர்களுக்கு 26 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கெதிராகப் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 26 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 6 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதே பருத்தித்துறை நீதவானால் குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (இ-10)

## கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய பயிலுநர்கள் அனுமதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 19 தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இவ்வருடம் சுமார் 8 ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரிய டிப்ளோமாப் பயிலுநர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கடந்த 2016, 2017ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் சுமார் 27 டிப்ளோமாக் கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் மூன்றாம் வாரம் ஆரம்பமாகவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாத்திரம் மொத்தம் 350 பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்லூரி பீடாதிபதி எம்.ஐ.எம். நவாஸ் தெரிவித்தார்.

கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி, இஸ்லாம், விசேட கல்வி ஆகிய 05 பாடநெறிகளுக்கு டிப்ளோமாதாரிகள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

2016 மற்றும் 2017ம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய, இரு கல்வியாண்டு பயிலுநர்கள் ஒரே தடவையில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பீடாதிபதி எம்.ஐ.எம்.நவாஸ் தெரிவித்தார். (இ-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆக்கினை



உணர்ச்சிவயப்பட்ட நிலையிலேயே எண்ணிப் பழகிக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையில், மன அலைகள் விநாடிக்கு 14 முதல் 40 வரை (14 to 40 cycles per second) அமைகின்றன. ஆற்றல் முழுவதும் நுணுகி, மனத்தை, மன அலையை, சுழலை அமைதிப்படுத்தும்போது "பீட்டா அலை" (beta wave) என்று சொல்லக்கூடிய உணர்ச்சி நிலையிலிருந்து விடுபட்டு அமைதி நிலைக்கு வந்துவிட முடியும். உதாரணமாக, ஒருவர் ஒரு நிறுவனத்தின் மனேஜராக இருக்கும் பொழுது அவரது அதிகாரம் அந்த நிறுவனம் முழுவதும் வியாபித்திருக்கிறது. அதே நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு பகுதி - அதிகாரியுடைய அதிகாரம் அந்தப் பகுதியோடு முடிகிறது. அந்தப் பகுதியில் பணியாற்றும் ஒரு எழுத்தரின் பொறுப்பு, அவர் பார்க்கும் கோப்புகளோடு நின்றுவிடுகிறது. அதுபோலவே, நம் மனம் எதை எண்ணிப் பழகி இருக்கிறதோ அந்த அலை நீளத்திலேயே இருக்கும். தியானத்தின் போது அதை விடுத்து எல்லா நிலைகளிலேயும் கொண்டு வந்து நாம் இணைப்புக் கொடுத்துப் பழகிக் கொள்கிறோம். "பீட்டா அலை" (beta wave) யில் இருந்து "ஆல்பா அலை" (alpha wave)க்கு வருகிறோம் அதாவது உறக்கத்தில் என்ன நிலை வருமோ, அந்த நிலைக்கு வருகிறோம். ஆனால் உறங்காத விழிப்பு நிலையிலேயே இருக்கிறோம். இதைத் தான் ஆக்கினை நிலை என்று தியானப் பயிற்சியிலே சொல்கிறோம்.

உள்ளுணர்ந்து உயிரைக் கவனிக்கிறபொழுது, மனம் ஒரு பொருளாகவோ, வடிவமாகவோ, குணமாகவோ மாறாது. அப்படி ஒடுங்கி ஒடுங்கி மனம் நுணுகிய நிலையில் இருக்கும் அது வரையிலும் "ஆல்பா அலை" (alpha wave) நிலையிலேயே இருக்கும். உறக்க நிலையிலும் மனம் வடிவம் எடுப்பதில்லை, குணமாக இருப்பதில்லை. அதனால், "ஆல்பா அலை" (alpha wave) உறக்கத்தில் தானாகவே வந்து விடும். இத்தகைய அலை நீளத்தை நம்மால் பாதுகாக்க முடியுமானால், நமக்கு எந்த விடயத்திலும் உணர்ச்சி வயப்பட்ட நிலை வாராது. மிகுந்த பற்றுதலினால், ஆழ்ந்த உணர்ச்சி வயப்படும் நிலை ஏற்படாது.

# 20 வயது பெண்கள் கரப்பந்தாட்டம் வயாவிளான் மத்திய கல்லூரி சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி மோதியது. இதில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. 3ம் இடத்தை முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது. (க-60)

# சென்.தோமஸ் அணியை வென்று சம்பியனாகியது அருணோதயா

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.





வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

3ஆம் இடத்தை கோப்பாய் மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது. (க-60)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. மகுடம்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:20, 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியனானது. 3ஆம் இடத்தை அளவெட்டி அருணோதயாக்கல்லூரி அணி பெற்றது. (க-60)

# ரஷீத் கானை தாக்கிய பந்து; அடுத்த போட்டிகளில் களமிறங்குவாரா?

ஆப்கானிஸ்தான் அணி வீரர் ரஷீத் கான் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான லீக் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 41.1 ஓவரில் 172 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அதன் பின்னர் ஆடிய நியூசிலாந்து அணி, 32.1 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

முன்னதாக, ஆப்கானிஸ்தான் அணி விக்கெட்டுகளை இழந்து கொண்டிருந்தபோது, இளம் வீரர் ரஷீத் கான் களமிறங்கினார். அவர் அதிரடியாக ஆடி, ஓட்டங்களை குவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பெர்குசன் வீசிய பந்து ரஷீத் கானின் தலையை பலமாக தாக்கியது. அத்துடன் ஸ்டெம்பில் பட்டு விக்கெட்டும் ஆனது. பந்து தாக்கியதில் நிலைகுலைந்த ரஷீத் கான், தலையைப் பிடித்துக்கொண்டு பெவிலியனுக்கு திரும்பினார்.

அங்கு அவரை மருத்துவர்கள் பரிசோதித்தனர். பந்தின் தாக்கத்தால் ரஷீத்திற்கு தலைவலி மற்றும் மயக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. மொத்தமாக அவருக்கு இரண்டு முறை லேசாக மயக்கம் வந்துள்ளது.

ஆனால், அதிலிருந்து இரண்டு முறை அவர் மீண்டு வந்துள்ளார். எனினும் தற்போது அவரை மருத்துவர்கள் சோதனை செய்து வருகின்றனர். இதன் காரணமாக அடுத்த போட்டியில் களமிறங்க அவர் தனது உடல்தகுதி நிரூபிக்க வேண்டும்.

நட்சத்திர வீரரான ரஷீத் கான் காயமடைந்துள்ளது, அந்நாட்டு அணி வீரர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. (க)



நல்லூர் பிரதேச சபையின் இளைஞர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் கலந்து கொண்டதுடன் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஜதீபன் மற்றும் மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (கு)

**கொவிசெத**
திகதி 2019.06.09
சீட்டிழுப்பு இலக்கம் 2143
F 13 27 55 57

**மஹஜன சம்பத**
திகதி 2019/06/09
சீட்டிழுப்பு இலக்கம் 3934
U 3 0 6 7 7 3

**தன நிதானய**
திகதி 2019-06-09
சீட்டிழுப்பு இலக்கம் 159
G 37 44 45 76

**நீரோகா**
திகதி 09/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 556
விருச்சிகம் 02 33 41 45

## காணாமல் ஆக்...

வலுவூட்டல் அமைச்சர் தயா கமகேயின் வருகைக்கு வவுனியா காணாமல் ஆக்கப் பட்ட உறவுகள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

போராட்ட களத்தினைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புக்கடமையை மேற்கொண்டனர். முன்னோக்கிச் சென்ற உறவுகளின் போராட்டத்தினை தடுத்து நிறுத்திய பொலிஸார் போராட்டம் மேற்கொண்ட உறவுகளுடன் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவராட்சி போராட்டத்தின் காரணத்தைக் கேட்டறிந்தபோது ஜனாதிபதியுடன் நிற்கும் தமது பிள்ளைகளையும் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கும் தீர்வு எங்கே என்று கோசமெழுப்பியிருந்தனர்.

நேற்றுடன் 841ஆவது நாட்களாக வவுனியாவில் போராட்ட களத்தில் சுழற்சி முறையான போராட்டத்தினை மேற் கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் நேற்றைய போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3,250)

## ஒலுமடு விபத்தி...

ஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

மாங்குளத்திலிருந்து முள்ளியவளை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் ஒலுமடு பகுதியில் உள்ள வீதி வளைவில் திரும்ப முற்பட்ட வேளையில் வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் 17 ஆம் கட்டை நெடுங்கேணியைச் சேர்ந்த காத்தலிங்கம் துஷ்யன் வயது 27 என்ற இளைஞன் சம்பவ இடத்தில் படுகாயமடைந்து மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுமதிக் கபட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

அத்தோடு குறித்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பாஸ்கரன் (வயது 57) என்பவர் காயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் .

சம்பவ இடத்திற்கு சென்ற மாங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(3)

## வவுனியாவில்...

உடைக்கும் குவாறி காணப்பட்டிருந்தது.

எனினும் குறித்த கிடங்கு மூடப்படாமையால் நீர் தேங்கி நின்றுள்ளது. இதனை அவதானித்த 15 வயது மற்றும் 18 வயதுடைய மாணவர்கள் இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதனால் குளிப்பதற்காக சென்றுள்ள நிலையில் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் இருவரது சடலங்களையும் மீட்கும் பணி இடம்பெற்று வருவதுடன் பம்பைமடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,281,250)

## இந்தியப் பிரதம...

தில் நடந்த இரு தரப்பு பேச்சுக்களை அடுத்து, இந்தியத் தூதுவரின் இல்லமான இந்தியா ஹவுசுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அங்கு சில சந்திப்புகள் நடத்தினார்.

முதலாவதாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன் போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பரந்துபட்ட இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் விரிவான சந்திப்பு இடம்பெற்றது. தீவிரவாத முறியடிப்பு, பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், நெருக்கமான பிணைப்பு இருக்க வேண்டிய தேவை குறித்து நாங்கள் கலந்து ரையாடினோம்" என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மகிந்த ராஜபக்சவுடன், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தினேஸ் குணவர்த்தன, நாமல் ராஜபக்ச ஆகியோரும், இந்தியப் பிரதமருடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (3)

## காற்றுடன் கூடி...

பிரதேசத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும். மேல், தென், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும்" வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (3)

## தமிழர்களின் ...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்திய பிரதமருக்கு வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் தரப்பு பிரச்சினைகள் குறித்து ஆராய டெல்லியில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்துதர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று இலங்கைக்கான அரச முறைமை விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்திருந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

சுமார் 8 நிமிடங்கள் இரு தரப்பினரும் கலந்துரையாடியிருந்தனர். இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில்' தலைவர் சம்பந்தனுடன், உறுப்பினர்களான சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதற்கு பதிலளித்த இந்தியப் பிரதமர் மோடி, தூதரக மட்டத்தில் இது குறித்து பேசி ஒரு தீர்மானம் எடுக்கலாம் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்புகளை நடத்த துரித ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் வாக்குறுதியளித்துள்ளார். (3)

## பொருளாதார...

விருத்தி நடவடிக்கைகளுக்கான இருதரப்பினரதும் ஒத்துழைப்பு தொடர்பிலும் உலக பயங்கரவாத செயற்பாடுகள், அதனை ஒழிக்க எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதோடு இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பணிகளுக்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்கும் என்றும் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது முறையாகவும் இந்தியாவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள நரேந்திர மோடி நேற்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது இருவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போதே மேற்கண்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. (3)

## இந்தியாவிற்கு ...

யேற்றத்திற்கு இரா.சம்பந்தன் வாழ்த்து தெரிவித்தார். இதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார் மோடி.

முன்னதாக திட்டமிட்டதை விட குறைவான நேரமே இந்த சந்திப்பு நடந்தது. இந்த சந்திப்பிற்கு முன்னதாக இடம்பெற்ற மகிந்தவுடனான சந்திப்பு சற்று நேரம் அதிகமாக இடம்பெற்றதால், இந்த சந்திப்பு 8 நிமிடங்கள் அளவிலேயே இடம்பெற்றது.

சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்பு தமிழ் மக்களிற்கு எதிராகவே அமைந்துள்ளதை சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இலங்கையில் தமிழர்கள் சம அந்தஸ்தில் வாழ இந்தியா ஆகக்கூடிய கரிசனை எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும், பிளவுபடாத ஒன்றுபட்ட நாட்டுக்குள் எமக்கு ஒரு தீர்வு வேண்டும் என கேட்டுக் கொண்டது. இந்த கோரிக்கையை மிக கூர்மையாக கேட்டுக் கொண்டிருந்த மோடி, "இது பற்றி என்னிடம் ஏற்கனவேயும் சொல்லியிருக்கிறீர்கள்" என குறிப்பிட்டார்.

பின்னர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை இந்தியாவிற்கு வருமாறும், அங்கு விரிவாக கலந்துரையாடலாமென்றும் கூறிய மோடி, கூட்டமைப்பின் பயண ஏற்பாட்டை உடனடியாக மேற்கொள்ளும்படி அங்கிருந்த இந்திய தூதரக அதிகாரிகளிடமும் குறிப்பிட்டார்.

பின்னர், பலாலி விமான நிலையத்தை பற்றியும் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர். முதலில் சிறிய விமானங்களையாவது சேவையில் ஈடுபடுத்தலாம் என கேட்டுக் கொண்டனர். இதை கேட்டு தலையாட்டிய மோடி, இதில் கவனம் செலுத்தும்படி தூதரக அதிகாரிகளிடம் குறிப்பிட்டார். (3)

## மீண்டும் இந்தி ...

இந்தியாவிற்கும் இலங்கைக்குமான கூட்டு அச்சுறுத்தலாகவே பயங்கரவாதம் காணப்படுகின்றது. அந்த சவாலை ஒன்றிணைந்து எதிர்கொள்ள உறுதி பூணுவோம் என தெரிவித்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பாரத இதயத்தில் இலங்கைக்கு என்றும் சிறப்பிடம் உண்டு. குறுகிய விஜயம் என்றாலும் மிகவும் பலனுள்ளதாகவே அமைந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விஜயம் தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (3)

## சிறுவர் வைத்...

திருச்சபையின் சமகால நிர்வாகத்தால் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த காணிக்கான சுற்று மதில்கள் கட்டப்பட்டு சிறுவர் வைத்தியசாலை அமைக்கப்படவிருந்த வேளையில், குறித்த காணியின் உரிமம் தென்னிந்தியத் திருச்சபையின் சமகால நிர்வாகத்துக்கு இல்லையென்றும் அந்தக் காணியின் உரிமம் தமக்கே உரியது என்றும் ஒரு தரப்பு சட்டப்பிரச்சினையை எழுப்பியுள்ளது.

இதன்காரணமாக சிறுவர் வைத்தியசாலையை நிர்மாணிக்க முடியாத அவலம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (3)

## 97 கிலோ மாட்..

நகர் பகுதியில் முச்சக்கர வண்டியில் மாட்டிறைச்சியைக் கொண்டு சென்ற நாவாந்துறையைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர் யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுச் சுகாதாரத் துறையினரால் நேற்று காலை கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 97 கிலோ கிராம் மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டது.

சுகாதாரத் துறையினரின் அனுமதி பெறப்படாமல் மாட்டை வெட்டி அதன் இறைச்சியை விற்பனைக்காக எடுத்துச் சென்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர், யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த மேலதிக நீதவான், சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

அத்துடன், முச்சக்கர வண்டியை தடுத்து வைக்க உத்தரவிட்ட மேலதிக நீதவான் காயத்திரி சைலவன், சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட 97 கிலோ கிராம் மாட்டிறைச்சியையும் தீயிட்டு எரித்து அழிக்க பொதுச் சுகாதாரப் பிரிவினருக்கு கட்டளையிட்டார்.(3)

## அரசுக்கெதிரான பிரேரணைக்கு கூட்டமைப்பு ஆதரவளிக்கும்-நலிந்த

அரசாங்கத்துக்கு எதிராக தம்மால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, தமிழத் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவளிக்கும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தப் பிரேரணைக்கான ஆதரவு அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவிக்கையில், "நாம் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டு வந்துள்ளோம். இந்த பிரேரணை தொடர்பான விவாதம் அடுத்த மாதம் 10ஆம் 11ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. 11 ஆம் திகதி மாலை 6 மணிக்கு இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

260 உயிர்கள் கொல்லப்பட்டும் 600 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த குண்டுத் தாக்குதலுக்கு காரணமான இந்த அரசாங்கம் விலக வேண்டும்.

அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். (3)

## வேலை ஆள் தேவை

வன்னேரிக்குளம் முருகன் கோவிலடியில் உள்ள வீட்டையும் அங்குள்ள கால்நடைகளையும் தங்கியிருந்து பராமரிக்க ஆள் தேவை.

குடும்பமாகவும் தங்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு (C-6640)

ராகுலன் : 077 034 4315

கிரி : 004 799860296



## தென்னம்பிள்ளை விற்பனை

V.K.N.V விவசாய பண்ணையில் நன்கு தேர்வுசெய்து பயிரிட்ட நல் இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு தாய்மரங்களை பார்த்து பிள்ளைகளை பெற்றுக்கொள்ளலாம்.

077 330 1798



## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இப்பொழுது!!!

மிகக்குறைந்த கட்டணத்தில்

UK - 350/=

France, Germany, Italy, Denmark 500/=

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S.Road, Jaffna. (9086) 0777 554 528



## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.

UK - 525.00, Germany - 675.00, France - 830.00

நிபந்தனைகள் எதுவும் இல்லை (C-6615)

அருள்

இல.1. NDB வங்கிக் கட்டடம்.
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576



## ஜப்பான் - மலேசியா - கட்டார்

வீட்டுப் பணிப்பெண்கள் சம்பளம் (ரூபா) 52,800 - 122,250

உணவு, மருத்துவம், காப்புறுதி, விமானச்சீட்டுக்கள் இலவசம்

0777 324 004 ☎ 021 2219 221

எமரல்ட் ஐல் License No. 2268

முற்றிலும் இலவச பயணம்

221-1/1. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



## பதவிக்கான தேடல்

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் Holdings Lanka நிறுவனத்துக்கான புதிய கிளைகள் ஆரம்பமாகவுள்ளன. மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு இவ்விடங்களில் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் தேவையாகவுள்ளனர்.

- O/L, A/L முடித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
- O/L இல்லாதவர்களுக்கான விசேட பதவி வாய்ப்புக்களும் உள்ளன.

தொடர்புகளுக்கு:- 076 459 7725 (9083)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9081)



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS (C-6532)

மானிப்பாய் 0768226240 V2 TRAVELS

யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை



## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-6558)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413



அகவை அறுபதில் ஆறுதலடையும் நண்பனுக்கு

## நல்வாழ்த்துக்கள்



மகேசன் கஜேந்திரன்

B.A Sc & Maths Trd SLPS - I

(அதிபர் யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

ஆரம்பக் கல்வி முதல் அட்வான்ஸ் லெவல் வரை
இந்துவின் மைந்தர்கள் நாம்
ஆசிரிய சேவை முதல் அதிபர் சேவை வரை
இந்துவின் சேவகர்கள் நாம்
ஆறுமுதல் அறுபது வரை
இனிய நண்பர்கள் நாம்
ஆறுதலுக்கு பின்னும் அன்புடன்
இணைபிரியாதிருக்க
ஞானவைரவரையும் ஞானலிங்கேசுவரரையும் வேண்டுகின்ற

நண்பன் சதா. நிமலன்
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(C-6641)



## BA, B.com, B.Sc

(காமராசர் பல்கலைக்கழகம் மதுரை (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- பரீட்சைகள் யாவும் கடந்த காலங்களில் நடைபெற்றதைப் போன்று காமராசர் பல்கலைக்கழகத்தின் வடமாகாண இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.
- இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பதிவு முடிவுத்திகதி - 16.06.2019 ஆகும்.
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு:-MA, MCom, MBA, MSc இப்பட்டநெறிகளுக்குரிய பதிவுகளும் நடைபெறுகின்றன.

(C-6636)

விபரங்களுக்கு:-யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
021 222 8148, 077 846 9721
0773144762

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.



## முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஜுன் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11.30 வரை

**Tilko Jaffna City Hotel- Jaffna**

பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப்பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.

அனுமதி இலவசம்

முன்பதிவுகளுக்கு:- 021 222 1455 / 0777 822 014 / 0777 105 205

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.